விலை: 30.00
viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 044 வள்ளுவர் ஆண்டு 2053 தை 19 செவ்வாய்க்கிழமை (01.02.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

இனப்பிரச்சினைக்கான தீர்வு

## அரசியலமைப்பில் கிடைக்காமல் போகலாம்

பேராசிரியர் திஸ்ஸ விதாரண



03 ஆம் பக்கம் பார்க்க

உள்நாட்டு பொறிமுறை மூலம்


## எமது பிரச்சினையை தீர்ப்பதே நோக்கம்

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்

05 ஆம் பக்கம் பார்க்க

## மீள்குடியேற்றம் தொடர்பில்

### யாழ்.மாவட்ட அரச அதிபரிடம் ஐ.நா பிரதிநிதி கேட்டறிந்தார்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தற்போது மேற்கொள்ளும் மீள்குடியேற்ற நடவடிக்கை தொடர்பாக யாழ். மாவட்ட அரச அதிபரிடம் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டப் பணிப்பாளர் 15

கிளிநொச்சியில்

## எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - இராமநாதபுரம் 6ஆம் யுனிற் பகுதியில் எரிவாயு 15

வடமராட்சி கிழக்கு கடலில்

## காணாமல்போன மீனவர்கள் சடலங்களாக நேற்று மீட்பு





(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு கடலில் 15

# இலங்கையை ஐ.நா இம்முறை இறுக்கும்

## இலங்கைக்கான ஐ.நா வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் தெரிவிப்பு



*(யாழ்ப்பாணம்)*

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இம்முறை இலங்கைக்கு கடுமையான அழுத்தம் பிரயோகிக்கப்படுவதோடு ஐ.நாவின் அறிக்கையும் கடுமையாக இருக்கும் என இலங்கைக்கான ஐ.நா வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் தெரிவித்தார்.

*(15ஆம் பக்கம் பார்க்க)*

கொரோனா

## 21 பேர் பலி

(கொழும்பு)

கொரோனாத் தொற்றால் நாட்டில் மேலும் 21 பேர் உயிரிழந்துள்ள 15

நாட்டில் மேலும்

## +1,082 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

கோவிட் தொற்று உறுதியான மேலும் 1,082 பேர் நேற்று அடையாளம் காணப்பட் 15

## வடமராட்சியில் இலங்கை - இந்திய மீனவர்கள் இடையே மோதல்

### இந்திய மீனவர்களால் பெற்றோல் குண்டு வீச்சு



ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி சக்கோட்டை கடற்பரப்பிற்குள் சட்டவிரோதமாக நுழைந்த மூன்று இந்தியப் படகுகள் யாழ். கடற்கரை பகுதியில் வைத்து நேற்றிரவு கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது இந்திய மீனவர்களுக்கும் இலங்கை மீனவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலின்போது இந்திய மீனவர்களினால் 15

## 3 நாட்கள் காய்ச்சல் பல்கலை மாணவி பலி

### யாழ்ப்பாணத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

3 நாட்கள் தொடர் காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்ட யாழ்ப்பாணத்தைச் 15

## கொக்குவிலில் 42 நாட்களான குழந்தை உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

42 நாட்களேயான குழந்தை ஒன்று கொக்குவில் மேற்குப் பகுதியில் உயிரிழந்துள்ளது.

காலை 4.30 மணியளவில் தாய்ப்பால் கொடுத்து விட்டு குழந்தையை நித்திரையாக்கியுள்ளனர். 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கனேடிய பிரதமருக்கு கோவிட்

கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளது.

இதனை அவர் தனது ட்விட்டரில் பதிவிட்டுள்ளதுடன், அதில் அனைவரையும் "தயவுசெய்து தடுப்பூசி செலுத்திக் கொள்வதற்கு ஊக்கப்படுத்துங்கள்" என வலியுறுத்தியுள்ளார்.

கோவிட் தொற்று உறுதியான ஒருவருடன் அவர் தொடர்பில் இருந்ததையடுத்து, அவர் ஐந்து நாட்களுக்கு தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்படுவதாக அறிவித்திருந்தார். (ம)

# மரண அறிவித்தல்

தோற்றம்
16 . 05 . 1942



மறைவு
31 . 01 . 2022

## அபிராமேஸ்வரி சிவராசா

யாழ். பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அபிராமேஸ்வரி சிவராசா அவர்கள் நேற்று (31.01.2022) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவராசா அவர்களின் அன்புத் துணைவியாரும் குலநாதன் அனுசியாதேவி, அனந்தராஜா, அருந்தவராஜா, அருள்ராஜா, அமுதராஜா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (01.02.2022) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அனந்தராஜா 077 777 0481
திவ்யன் 077 772 3290

தகவல் :-
குடும்பத்தினர்

(C-3683)

# 6 ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
20 . 10 . 1986



ஆண்டவன் அடியில்
09 . 02 . 2016

## திருமதி யோ.சிவகௌரி

(முகாமைத்துவ உதவியாளர் - கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி)

ஆறாண்டானாலும் கௌரி உன் நினைவுகள்
ஆறாது எம் இதயத்தில்
ஈரமாய் எம் இதயத்தில்
கனக்க வைக்கிறது கௌரி
மறுவடிவில் வருவாய் என ஏங்கி
எதிர்பார்க்கும் உன் பாசமான
உறவுகள்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-3682)

இல. 37/03, கணேசபுரம், கிளிநொச்சி.
குடும்பத்தினர்

# 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

கடந்த 02.01.2022 அன்று இறைபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

அமரர்

## அன்னலிங்கம் தெய்வீகலிங்கம் (லிங்கம்)



தோற்றம்
21 . 11 . 1957

மறைவு
02 . 01 . 2022

அவர்களின் 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (01.02.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் நல்லடக்க நிகழ்வுகளில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி, கண்ணீர் அஞ்சலி, மலர் வளையங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் பல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்பிற்கு இலக்கணமாய்
அவனியில் வாழ்ந்து
பண்புடைமை காத்து
பக்குவமாய் வழி நடந்தீர்
இரக்கத்தின் இருப்பிடமாய்
ஈகை பல செய்து எல்லோருக்கும்
நல்லவராய் நாணயமாய் நடந்தீர்
ஏனோ இறைவன் இடை நடுவில்
பறித்து விட்டான்...
துன்புற்றோர் துயர் துடைத்து
துணைக்கரமாய் அடைக்கலம்
தந்த உம்மை
ஆண்டவன் ஏனழைத்தான்?
பண்புள்ளோரை பல காலம்
வாழவிடக் கூடாதென்றோ?
என் செய்வோம்
இறைவன் சித்தம் இது
இனி காணமுடியாத சோகநிலையோடு
இங்கிருந்தே ஏங்கியழுகிறோம்.

இல.12, பொற்பதி றோட்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(C-3681)

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனப்பிரச்சினைக்கான தீர்வு

# உத்தேச அரசியலமைப்பில் கிடைக்குமென நம்ப முடியாது

### — பேராசிரியர் திஸ்ஸ விதாரண —



(கொழும்பு)

**காணாமலாக்கப்பட்டோரது விவகாரத்திற்கு தீர்வு வழங்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு முழுமையாக உள்ளது. நாம் வாக்குறுதி வழங்கவில்லை என ஒருபோதும் தட்டிக்கழிக்க முடியாது.**

உத்தேச அரசியலமைப்பில் இனப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கப் பெறும் என்பதை தனிப்பட்ட முறையில் இதுவரையில் நம்பவில்லை என லங்கா சமசமாஜக்கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

உத்தேச அரசியலமைப்பு உருவாக்கம், காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

யுத்த சுவடுகளை நட்டஈடால் மாத்திரம் ஈடுசெய்ய முடியாது.

இறுதிக்கட்ட யுத்தத்திலும், அதற்கு முற்பட்ட காலத்திலும் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் காலம் காலமாக பேசப்பட்டு வருகிறதே தவிர இறுதித் தீர்மானம் இதுவரையில் காணப்படவில்லை.

காணாமலாக்கப்பட்டோரது உறவினர்கள் பல ஆண்டு காலமாக நீதி கோரி போராட்டத்தில் ஈடுபடுவது கவலைக்குரியது.

காணாமல் ஆக்கப்பட்ட தங்களது உறவுகளுக்கு நேர்ந்தது என்ன என்பதை தெரிந்து கொள்ளும் முழு உரிமையும் அவர்களின் உறவினர்களுக்கு உண்டு.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தில் ஆரோக்கியமான முன்னேற்றம் காணப்பட்டது என்பதை அரசியலுக்கு அப்பாற்பட்ட நிலையில் இருந்து ஏற்றுக்கொள்ள வேண்டும்.

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்ததை தொடர்ந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண சர்வகட்சி குழு மாநாட்டில் முன்னெடுக்கப்பட்ட தீர்மானங்களை செயற்படுத்தியிருந்தால் யுத்தத்தை அடிப்படையாக கொண்டு தோற்றம் பெற்ற பல பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றிருக்க முடியும்.

காணாமலாக்கபட்டோரது உறவினர்கள் அரசாங்கத்திடமிருந்து நியாயத்தை முழுமையாக எதிர்பார்க்கிறார்கள்.

தற்போதைய நிலைவரத்தை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில் உத்தேச புதிய அரசியலமைப்பு ஊடாக இனப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கப் பெறும் என்பதை தனிப்பட்ட முறையில் நம்பிக்கை கொள்ள முடியவில்லை.

ஏனெனில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வழிமுறை ஏனைய பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் கோணத்தில் பார்க்கப்படுகிறது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண அனைத்து இன மக்களையும் ஒன்றினைத்து நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும்.

அவ்வாறான சூழல் தற்போது இல்லை என அவர்மேலும் தெரிவித்தார். (நி-5)

---

## வடக்கிற்கான ஒரு சேவை உட்பட 14 புகையிரத சேவைகள் ரத்து

(கொழும்பு)

சில புகையிரத மார்க்கங்களின் 14 புகையிரத சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கட்டுப்பாட்டாளர்கள் பலருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளதால் இவ்வாறு புகையிரத சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக அந்தத் திணைக்களம் குறிப்பிட்டு ள்ளது.

பிரதான புகையிரத மார்க்கத்தின் 6 புகையிரத சேவை களும், களனி வெளி மற்றும் கரையோர புகையிரத மார்க்கங்களின் தலா 2 புகையிரத சேவைகளும் இரத்து செய்யப்பட்டுள்ளன.

மேலும் புத்தளம் புகையிரத மார்க்கத்தின் 3 சேவைகளும், வடக்கிற்கான ஒரு புகையிரத சேவையும் இவ்வாறு இரத்து செய்யப்பட்டுள்ளதாக புகையிரதத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (நி-5)

---

## மகாபொல புலமைப் பரிசில் தொகை அதிகரிக்கப்பட வேண்டும்

### பல்கலை. மாணவர்கள் கோரிக்கை

(கொழும்பு)

ஐயாயிரம் ரூபாய் மகாபொல புலமைப்பரிசில் தொகை அதிகரிக்கப்பட வேண்டும் என பல்கலைக்கழக மாணவர்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது, பல்கலைக்கழகங் களின் சிற்றுண்டிச்சாலைகளில் உணவுப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளதுடன், ஏனைய கல்வி செலவீனங்களும் உயர்ந்துள்ளதாக அவர்கள்சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனால் தமது கல்வி நடவடிக்கைகளை தொடருவதில் பாரிய சிக்கல் ஏற்பட்டுள்ளது.

எனவே, அரசாங்கம் தமக்கு வழங்கப்படும்மகாபொல புலமைப்பரிசில்தொகையை அதி கரிக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-5)

---

## புலமைப் பரிசில் பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு ஆரம்பம்

(கொழும்பு)

2021 ஆம் ஆண்டுக்கான 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, எதிர்வரும் 5 ஆம் திகதி வரையில் இந்த பணிகள் இடம்பெறும் என அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (நி-5)

---

## 'கறுப்பு ஜனவரி' போராட்டம் யாழில் முன்னெடுப்பு



(யாழ்ப்பாணம்)

ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டமை, காணாமல் ஆக்கப்பட்டமை, தாக்கப்பட்டமை மற்றும் ஊடக நிறுவனங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் முறையான விசாரணைகளை முன்னெடுத்து, நீதியை நிலைநாட்டுமாறு வலியுறுத்தி இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். நகரில் நேற்று 'கறுப்பு ஜனவரி' கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம் முன்பாக ஒன்று கூடிய ஊடகவியலாளர்கள் கறுப்புக் கொடிகளைத் தாங்கியவாறு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அத்துடன், இது தொடர்பில் பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களின் ஒத்துழைப்பையும் பெறும் நோக்கில் துண்டுப் பிரசுரமும் விநியோகிக்கப்பட்டது.

(4-5-18-33-104)

---

## அனைத்து மீனவர்களும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுங்கள்

### வடமராட்சி மீனவர்கள் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள வடமராட்சி மீனவர்கள் தமது போராட்டத்திற்கு ஆதரவாக அனைத்து மீனவர்களையும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.

தமிழக மீனவர் களின் அத்துமீறலால் வடமராட்சி மீனவர்களின் வலைகள் அறுத்து நாசமாக்கபட்டுள்ளன.

அதனை கண்டித்து மீனவர்கள் நேற்று சுப்பர் மட வீதியை மறித்து பந்தல்களை போட்டு போராட்டதில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் தமக்கு தீர்வு கிடைக்கும் வரையில் கடற்றொழிலுக்கு செல்லப்போவதில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை ஏனைய பிரதேச மீனவர்களும் தமது போராட்டத்திற்கு வலு சேர்க்கும் வகையில் தொழில் புறக்கணிப்பில் ஈடுபடுமாறு வடமராட்சி மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(4-5-33-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்று நடால் வரலாற்றுச் சாதனை

ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் தொடரின், ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில், ஸ்பெயினின் முன்னணி வீரரான ரபேல் நடால், சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

35 வயதான ரபேல் நடால், வென்ற 21 ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டம் இதுவாகும். இதன்மூலம் டென்னிஸ் வரலாற்றில் 21 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற முதல் வீரர் என்ற வரலாற்று சாதனையை ரபேல் நடால் படைத்தார்.

பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நேற்று முன்தினம் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டி நடைபெற்றது.

இதில் உலகின் ஐந்தாம் நிலை வீரரான ஸ்பெயினின் ரபேல் நடாலும், இரண்டாம் நிலை வீரரான ரஷ்யாவின் டேனில் மெட்வடேவும் மோதினர்.



விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில், முதல் செட்டை 6-2 என டேனில் மெட்வடேவ் எளிதாக கைப்பற்றினார்.

இதனைத்தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செட்டில், டேனில் மெட்வடேவுக்கு ரபேல் நடால் கடும் நெருக்கடி கொடுத்தார்.

இதனால் செட்டை பிரேக் வரை நீடித்தது.

இதிலும் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திய டேனில் மெட்வடேவ், 7-6 என செட்டை கைப்பற்றினார்.

இன்னமும் ஒரு செட்டை இழந்தால் வெற்றி பறிபோகும் என்ற அச்சத்தில் மூன்றாவது செட்டை எதிர்கொண்ட நடால், 6-4 என செட்டைக் கைப்பற்றி பதிலடி கொடுத்தார்.

தொடர்ந்து சிறப்பாக விளையாடிய நடால், நான்காவது செட்டையும் 6-4 என கைப்பற்றி அசத்தினார்.

இருவரும் தலா இரண்டு செட்டுகளை கைப்பற்றியதால், வெற்றியை தீர்மானிக்கும் இறுதி செட் எதிர்பார்ப்பை எகிற வைத்தது.

இதில் தனது அனுபவத்தை சிறப்பாக கையாண்ட நடால், அரங்கத்தில் குழுமியிருந்த இரசிகர்களின் கரகோஷத்திற்கு மத்தியில் நான்கு மணிநேர போராட்டத்தை 7-5 என முடிவுக்கு கொண்டுவந்து சம்பியன் கிண்ணத்தை வென்றார்.

நடால், இறுதியாக 2009 ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் தொடரில் சம்பியன் பட்டம் வென்றிருந்தார்.

இது அவரது இரண்டாவது அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் சம்பியன் பட்டமாகும்.

21 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற முதல் வீரர் என்ற வரலாற்று சாதனையை பதிவு செய்த நடாலுக்கு சக வீரர்களான ரோஜர் பெடரர் மற்றும் நோவக் ஜோகோவிச் ஆகியோர் பாராட்டு தெரிவித்தனர்.

இதுதொடர்பாக பெடரர் வெளியிட்டுள்ள இன்ஸ்டாகிராம் பதிவில், உங்களது அசாத்தியமான பணி நெறிமுறை, அர்ப்பணிப்பு மற்றும் போராடும் குணம் எனக்கும் உலகெங்கிலும் உள்ள எண்ணற்ற பிறருக்கும் உத்வேகமாக உள்ளது என பதிவிட்டுள்ளார்.

இதேபோல், ஜோகோவிச் வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்தியில், அற்புதமான சாதனை. உங்களின் போராட்டக் குணம் மற்றொரு முறை வெற்றி பெற்றுள்ளது என பதிவிட்டுள்ளார். (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2500

**சாந்தன்**

பக்தன்: சாமி பொண்ணுங்க எல்லாம் நல்லவளா இருக்காங்க, ஆனா ஏன் பொண்டாட்டிங்க மட்டும் இப்படி கொடுமைப்படுத்துறாங்க?



கடவுள் : நான் பொண்ணுங்களைத் தான் படைத்தேன். நீங்கதான் பொண்டாட்டி ஆக்கிட்டீங்க

**குயிலினி**

உன் பக்கத்துல இருக்குறவன் தான்டா லீவு கேட்டான்.. நீயும் சேர்ந்து லீவு போட்டுட்ட




பின்ன நான் வந்தா அவன் வேலையையும் என்னைய பார்க்க சொல்லுவ

**சுபத்திரன்**

டேய் மெல்ல மெல்ல
ஏன்னா மணி 6 தான் ஆகுது பாரு




வேகமாக வந்து தெலைடா குளிருது

**விபுஜா**

ஆபிஸ்ல சந்தோசமா இருந்தா
பொண்டாட்டி போன் பண்றா...



வீட்ல சந்தோசமா இருந்தா மனேஜர்
போன் பண்றான்

**தார்மீகன்**

நெஞ்சு முழுக்க இருக்கு மாமா
லவ்வா மாப்ள
எது லவ்வா சனி மாமா



**சுலோசனா**

நான் கொஞ்சம் நேரம் சிரிக்கலாமா?




சிரிச்சுக்கோ...ஆனா கொஞ்ச
நேரத்திலேயே பெரிய ஆப்பு வைச்சிருவன்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டு பொறிமுறை மூலம் பிரச்சினையை தீர்ப்பதே நோக்கம்

## வெளிவிவகார அமைச்சர் பீரிஸ்



(யாழ்ப்பாணம்)

**உள்நாட்டு பொறிமுறை மூலம் பிரச்சினையை தீர்ப்பதே இந்த அரசின் நோக்கமென வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.**

நேற்று யாழ்.மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், உலக நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கை ஒரு அதிக பிரச்சினை உள்ள நாடும் இல்லை. அத்தோடு நாங்கள் ஏற்கனவே நடந்த பிரச்சினைக்காக நேரத்தையும் வீணடிக்க தேவையில்லை.

தற்போது இந்த கொரோனா என்னும் நோய்க்கு முகம் கொடுப்பதால் பல மில்லியன் கணக்கில் பணத்தை செலவழித்துள்ளோம். அதாவது தடுப்பூசி மற்றும் ஏனைய செயற்பாடுகளை முன்னெடுத்து எமது இலங்கையினை கொரோனா நோயில் இருந்து காப்பாற்றுவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றோம்.

இலங்கையின் நிலைப்பாடு என்னவென்றால் உள்நாட்டு பொறிமுறை மூலம் நடந்த பிரச்சினைக்கு தீர்வு காண்பது எமது நிலைப்பாடாக காணப்படுகிறது. தேசிய ஒற்றுமை ஒருமைப்பாடு என்பவற்றை நிலைநாட்டி உள்நாட்டு பொறிமுறை ஒன்றை உருவாக்கி அதன் மூலம் தீர்வு வழங்குவதை நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

ஜனாதிபதி பல்வேறுபட்ட முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றார். இன ஒற்றுமை மற்றும் நாட்டில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு பல வருடங்களின் பின்னர் ஒரு நல்ல ஒரு சாதகமான நிலை தற்போதைய கோட்டாபய அரசிற்கு ஏற்பட்டுள்ளது.

இனங்களுக்கிடையில் ஒற்றுமை, நல்லிணக்கம் ஏற்படக் கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. அதோடு இது ஒரு முடிவல்ல. ஒரு ஆரம்பப் புள்ளியாக இருக்கிறது. ஒரு சிலர் கூறலாம் இது போதுமானதான விடயம் அல்ல என அதை ஏற்றுக்கொள்கின்றோம்.

ஆனால் அதனை தொடர்ந்து செய்வதற்கு காலம் தேவை.

தற்போது பயங்கரவாத தடைச் சட்டத்தில் கூட மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எனவே 42 வருடங்களின் பின்னர் ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளது. கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை மாற்றுமாறு கூட யாரும் கூறவில்லை. அது மாற்றியமைக்கப்படவும் இல்லை. ஆனால் தற்போதுள்ள கோட்டாபய அரசாங்கம் இந்த பயங்கரவாத தடைச் சட்டத்தில் கூட மாற்றங்களை செய்துள்ளது. எனவே அவ்வாறு ஒரு முன்னேற்றகரமான ஒரு நிலை இருக்கின்ற போது நாங்கள் ஐ.நா.சபையில் ஜெனிவா கூட்டத்தில் இந்த விடயங்களை எடுத்துரைக்கவுள்ளோம் என தெரிவித்தார். (4-5-104)

# சுதந்திர தின நிகழ்வுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி

(கொழும்பு)

நாட்டின் 74 ஆவது சுதந்திர தினத்தை எளிமையாகவும் பிரமாண்டமாகவும் கொண்டாடுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்பு, அனர்த்த முகாமைத்துவ மற்றும் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். "சவால்களை முறியடிக்கும் வளமான நாளை" என்ற தொனிப்பொருளின் கீழ் 74 ஆவது தேசிய சுதந்திரதின நிகழ்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் சுதந்திர சதுக்கத்தில் கொண்டாடப்படவுள்ளது. இம்முறை சுதந் திர தின விழா அணிவகுப்பில் 6500 பேர் பங்கேற்கவுள்ளனர்.

அனைத்து இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பாரம் பரிய கலாசார நிகழ்வுகளும் சுதந்திரதின கொண்டாட்டத்தில் உள்ளடக்கப்படவுள்ளன.

இதேவேளை சுதந்திர தின விழாவை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் மரம் நடும் வேலைத்திட்டம் ஒன்றும் ஆரம்பிக்கப்படவுள்ளது. (நி-5)

# 11 இளைஞர்கள் கடத்தல் கரன்னகொடவின் மனு ஏப்ரலில் விசாரணைக்கு

(கொழும்பு)

வடமேல் மாகாண ஆளுநர் அட்மிரல் வசந்த கரன்னகொட தாக்கல் செய்த மனுவை எதிர் வரும் ஏப்ரல் 6 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வழக்கின் பிரதிவாதியாக தன்னை பெயரிட்டமைக்கு எதிராகவே குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

தன்னை பிரதிவாதியாக பெயரிடும் தீர்மானம் ஆதாரமற்றது என்று சுட்டிக்காட்டும் வசந்த கரன்னகொட அதனை இரத்து செய்யும் நீதிப் பேராணை கட்டளையொன்றை பிறப்பிக்குமாறு கோரியுள்ளார். (நி-5)


## வேலணை பிரதேச சபை பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

வேலணை பிரதேச சபையினால் பிடிக்கப்பட்டு உரிமை கோரப்படாத நாம்பன் கட்டாக்காலி கால்நடையொன்று பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

இடம் :- வேலணை பிரதேச சபை தலைமை அலுவலகம்
காலம் :- 02.02.2022 புதன்கிழமை மு.ப.10.30 மணி

- ஏலத்தில் கலந்து கொள்ள விரும்புவோர் குறித்த இடத்தில் உரிய கட்டணத்தை செலுத்தி ஏலத்தில் பங்கு கொள்ளலாம்.
- பகிரங்க ஏலத்தில் சித்தியடைவோர் உடனடியாக பணத்தினை செலுத்தி உரிய பட்டியிலிருந்து உரிய அனுமதியுடன் அன்றைய தினமே ஏற்றிச் செல்லல் வேண்டும்.

நமசிவாய கருணாகரகுரு மூர்த்தி
தவிசாளர்,
பிரதேச பை,
வேலணை.

01.02.2022

தொடர்புகளுக்கு :- 021 221 1505

(C-3678)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



உயர்திரு.
அப்பர் அருணந்திசிவம்
(அதிபர் யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி)

யா/உரும்பிராய் இந்துக் கல்லூரியில் அதிபராக பணியாற்றி 01/02/2022 இன்று அகவை அறுபதில் ஒய்வு பெற்று மணி விழா காணும் அதிபர் அவர்கள் ஒய்வுக்காலத்தில் சீரும் சிறப்பும் பெற்று மகிழ்வுடன் வாழ வாழ்த்துகின்றோம்

(9958)

கோட்டக்கல்விப் பணிப்பாளர்
அதிபர்கள்,
கோப்பாய்க் கல்விக் கோட்டம்.


# இராசிபலன்

01.02.2022
தை 19, செவ்வாய்க்கிழமை
அமாவாசை பிற்பகல் 12.09. மணிவரை

திருவோணம் முன்னிரவு 9.04 மணிவரை
சுபநேரம் - 11.06-12.36 மணிவரை
இராகுகாலம் -3.36-5.06 மணிவரை

சந்திராஷ்டமம்- மிருகசீரிடம், திருவாதிரை

வளவன்



**மேஷம்** வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப் புண்டு, புதிய முயற்சிகளில்' ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.



**ரிஷபம்** புதிய திட்டங்களில் முன்னேற்றம் காணும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்கள் கைகூடும்.



**மிதுனம்** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது,மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும்



**கடகம்** நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் நட்பு இடம் பெறலாம், செய் தொழிலில் முன்னேற்றம் காணும் நாள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.



**சிம்மம்** சிக்கனத்தைக் கடைப் பிடிக்கும் எண்ணம் உருவாகும், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம்.



**கன்னி** மன நிறைவு கூடும் நாள், நீண்ட நாட்களாக தள்ளிப்போட்ட காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், தாழ்ந்த சுபாவமுண்டு.



**துலாம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், செல்வாக்கு மேலோங்கும் நாள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், வாகன சுகமுண்டு, மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம்.



**விருச்சிகம்** சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், வளர்ச்சி கூடும் நாள், வழிபாட்டில் நம்பிக்கை கூடும், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.



**தனுசு** செய் தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும்.



**மகரம்** பொது நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.




**கும்பம்** சாப்பிடக் கூட நேரமில்லாமல் வேலைகளைச் செய்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உறவினர்களின் சந்திப்பால் சுப விரயங்கள் ஏற்படலாம்.



**மீனம்** மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், ஆரோக்கியமான நாள்.

தீய எண்ணங்களை உனக்குச் சொந்தமாக்கிக் கொள்ளாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்திய மீனவர்கள் அத்துமீறல்

# வடமராட்சி மீனவர்கள் வீதி மறியல் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

**தமிழக மீனவர்களால் வடமராட்சி மீனவர்களின் வலைகள் அறுத்து நாசமாக்கப்பட்டுள்ளது.குறித்த செயலை கண்டித்து பாதிக்கப்பட்ட மீனவர்கள் நேற்று திங்கட்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

வடமராட்சி, பருத்தித்துறை சுப்பர் மடம் பகுதியை சேர்ந்த மீனவர்களின் வலைகளே அறுத்து நாசமாக்கப்பட்டுள்ளன.

அதனை கண்டித்தே மீனவர்கள் சுப்பர்மட பகுதி வீதிகளில் படகுகளை , வலைகளை வைத்து வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதனால் அவ் வீதி ஊடான போக்குவரத்துக்கள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தது. தமக்கான தீர்வு கிடைக்கும் வரையில் தாம் வீதியை மறித்து தொடர் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவித்தனர்.

மேலும் மீனவர்களின் அத்துமீறல்களை கட்டுப்படுத்துமாறு பல்வேறு தரப்பினரிடமும் தொடர்ச்சியாக பல்வேறு தடவைகள் கோரிக்கைகளை முன்வைத்தோம். பல கட்டங்களாக போராட்டங்களை முன்னெடுத்தோம். இது எதற்குமே பயனில்லை.

அத்துமீறி எமது எல்லைக்குள் நுழையும் மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தி அவர்களை விரட்டியடிக்க எம்மால் முடியும். ஆனால் நாட்டின் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டும், நாட்டின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தக் கூடாது என்ற எண்ணத்திலையே நாம் பொறுமை காக்கிறோம்.

எமது பிரச்சினைகள் தொடர்பில் இந்தியா கரிசனை கொள்ளாவிடின் நாம் சீனாவின் உதவியை நாட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவோம்.

கடற்றொழில் அமைச்சர் இது தொடர்பில், நடவடிக்கை எடுக்க முடியாவிடின் அவர் அமைச்சு பதவியில் இருந்து விலகுவதே சிறந்தது என தெரிவித்தனர்.(4-5-18-33-60-104)

## கட்டட அனுமதிக்கான விண்ணப்பங்கள் தேக்க நிலையில்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையில் கட்டட அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படும் கட்டட விண்ணப்பங்கள் பல தேக்க நிலையில் காணப்படுகின்றன.அவ்வாறு தேக்க நிலையில் காணப்படுவதற்கான காரணங்களை ஆராய்ந்து உரிய காலத்தில் கட்டட அனுமதிகளை வழங்கி பொதுமக்களின் சிரமங்களையும்,சட்டவிரோத கட்டட அமைப்பையும் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் க.கஜிதன் வலியுறுத்தியுள்ளார்.

நேற்று சாவகச்சேரி நகர சபையில் இடம்பெற்ற விசேட அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

கட்டட விண்ணப்பங்களுக்கான அனுமதிகளை உரிய காலத்தில் வழங்குவதில் என்ன பிரச்சினை உள்ளது என ஆராய வேண்டும்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் அறிக்கையிடவில்லையா? அல்லது நகர அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கையில் தாமதமா? அல்லது சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்திலும் தரவுகளிலும் ஏதும் குறைபாடு உள்ளதா? என்பதனை சபைக்கு தெளிவுபடுத்த வேண்டும்.நகர அபிவிருத்தி அதிகார சபை தான் தாமதத்திற்கு காரணம் என்றால் அவர்களுக்கு எழுத்து மூலமாக அறிவிக்க வேண்டும்.

சட்டவிரோத கட்டடங்களும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இவ்வாறான செயற்பாடுகளைத் தவிர்க்க உரிய காலத்திற்குள் கட்டட விண்ணப்பங்களுக்கான அனுமதிகளை வழங்க நகரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.(4-5-30)



“சௌபாக்கியமான நோக்கு" கொள்கைத் திட்டத்துக்கு அமைவாக வீதி மற்றும் பெருந் தெருக்கள் , வீதி அபிவிருத்தி அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுவரும் ஒரு இலட்சம் கிலோ மீற்றர் வீதிகள் அமைக்கும் தேசிய செயற்றிட்டத்தின் கீழ் யாழ்.பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தினுள் அடங்கும் சுமார் 5 கிலோ மீற்றர் வீதி அமைக்கும் பணி அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (படம்- சிவசாந்தன்)



இளவாலை பெரியவிளான் சிகரம் அமையத்தின் ஒருவருட நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை, யாழ். போதனா மருத்துவமனை இரத்தவங்கிப் பிரிவுகளின் இணை அனுசரணையில் மாபெரும் இரத்ததான முகாம் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பெரியவிளான் பொது நோக்கு மண்ட பத்தில் இடம்பெற்றது.(படம்:-ரவிசாந், கஜிந்தன்)

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு திருவாவடுதுறை ஆதீனம் புலவர், ஏ. அனுசாந்தன் 'நவையறு காட்சி' என்னும் விடயப் பொருளில் சொற்பொழிவாற்றவுள்ளார்.(4-5)

## மிதிவெடி மீட்பு



(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கேரதீவுப் பகுதியில் உள்ள அரச காணியில் இருந்து நேற்று திங்கட்கிழமை காலை மண்ணில் புதையுண்ட நிலையில் வெடிக்காத மிதிவெடி ஒன்று இனங்காணப்பட்டது.

இராணுவத்தினரின் ரோந்து நடவடிக்கையின் போது குறித்த மிதிவெடி இனங்காணப்பட்ட நிலையில் அது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. (4-5-30)

## விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச பண்பாட்டுப் பெருவிழாவினை முன்னிட்டு கலைஞர்களினை கௌரவிக்கும் பொருட்டு கலைஞானச்சுடர் விருது மற்றும் இளங்கலைஞர் விருது வழங்கப்படவுள்ளது. இதற்கு தகுதி வாய்ந்த கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விருதுக்கான விண்ணப்பங்களினை அனுப்பி வைக்கும் இறுதித் திகதி 23.02.2022 ஆகும். இதற்கான விண்ணப்பங்களினை நல்லூர் பிரதேச செயலக கலாச்சாரப் பிரிவிடம் பெற்றுக் கொள்ளலாம் என நல்லூர் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (4-5)



தேசிய திருப்பாலர் சபை தினம் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் தலைமையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுஜன பெரமுனவுடன் இணைந்து
# சு.க. தேர்தல்களில் போட்டியிடாது

## மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

பொருட்களின் விலைகள் குறைந்த மட்டத்தில் காணப்பட்ட அமைதியான நாட்டையே தான் தற்போது ஆட்சியில் இருக்கும் ராஜபக்ஷவினரிடம் கையளித்தேன் என முன்னாள் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

எனினும் தற்போது சில கடைகளில் பனடோல் மாத்திரையை கூட பெற்றுக்கொள்ள முடியவில்லை என தனக்கு அறிய கிடைத்ததாகவும் அவர் தெரிவித்தார்.

சர்வதேச ஊடகம் ஒன்றிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இந்த விடயத்தினை தெரிவித்தார். தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வாழ்க்கை செலவுகள் மாத்திரமல்லாது சமையல் எரிவாயு, பசளை தட்டுப்பாடு உள்ளிட்ட விடயங்கள் காரணமாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கம் குறித்து தான் மட்டுமல்ல முழு நாடும் வெறுப்படைந்துள்ளது.

இப்படியான கூட்டணிகள் அமைக்கப்படுவதும் அவை சரிவதும் சகஜமானது. அத்துடன் எதிர்காலத்தில் எந்த சந்தர்ப்பத்திலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பொதுஜன பெரமுனவுடன் இணைந்து தேர்தல்களில் போட்டியிடாது.

இதற்காக எதிர்வரும் தேர்தல்களை அடிப்படையாக கொண்டு தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மறுசீரமைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அரசாங்கத்தை கவிழ்க்கும் சூழ்ச்சிகள் இன்னும் உருவாகவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (நி-5)


# மணிவிழா வாழ்த்து

திருமதி.
சுபத்திரா மகேஸ்வரன்
(நூலகர் - தரம்-I)




யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தில் எம்முடன் 25 வருடங்களாக நூலகராக, உதவி நூலகராகக் கடமையாற்றி இன்று 01.02.2022 ஆம் திகதி தனது அறுபதாவது அகவையில் ஓய்வு பெற்றுச் செல்லும் திருமதி.**சுபத்திரா மகேஸ்வரன்** அவர்களுக்கு எமது பிறந்த நாள் நல் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு அவர் தமது ஓய்வுக் காலத்தில் சீரும், சிறப்புடனும், உடல், உள ஆரோக்கியத்துடனும் இருக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்தி நிற்கின்றோம். (9956)

**ஊழியர் நலன்புரிச் சங்கம், பொதுசன நூலகம், யாழ்ப்பாணம்.**

# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 2<br>கி.பா: 50 செவ் 7 சூரி 5 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: உயர்தரம் நகைக்கடை வேலை<br>எதிர்பார்ப்பு:சாதாரண் படித்த பெண்<br>தொ.இ: B/12233 | பிறப்பு: 2002 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 2<br>கி.பா: 7 செவ் 4 சூரி 3 இல் உயரம்:5'4"<br>தகைமை/தொழில்: உயர்தரம் மேக்கப்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு (லண்டன். சுவிஸ் மட்டும்)<br>தொ.இ:G/12331 |
| பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: செவ் 2 சூரி 3 இல்<br>உயரம்: 170cm<br>தகைமை/தொழில்:A/L ASIA Asset Finance<br>எதிர்பார்ப்பு: எழுத்துடன் விவாகரத்து பெற்றவர் வெளிநாடு விரும்பத்தக்கது<br>தொ.இ: B/12235 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 4<br>கி.பா: 43 ¼ செவ் 5 சூரி 2 இல்<br>உயரம்: 4'9"<br>தகைமை/தொழில்: பொறியியலாளர்<br>எதிர்பார்ப்பு: தகுந்த தனியார். அரச உத்தியோகம் உள்நாடு மட்டும்<br>தொ.இ:G/12332 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அஸ்வினி<br>கி.பா: 23 ¾ செவ் 5 சூரி 2 இல்<br>உயரம்: 6'2"<br>தகைமை/தொழில்: கல்யாண மண்டபத்தில் முகாமையாளர்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/12236 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: அஸ்வினி 3<br>கி.பா: 36¼ செவ் 2 சூரி 3 இல்<br>உயரம்: 4'5"<br>தகைமை/தொழில்: பட்டதாரி (நுண்கலை)<br>எதிர்பார்ப்பு: படித்த உத்தியோகம் பார்க்கும் மணமகன் உள்நாடு மட்டும்<br>தொ.இ:G/12338 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 3<br>கி.பா: செவ் 2 சூரி 5 இல் உயரம்:172 cm<br>தகைமை/தொழில்: விஞ்ஞான ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: தகுந்த படித்த பெண்<br>தொ.இ: B/12237 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 46¾ செவ் 7 சூரி 6 இல் உயரம்:5'2"<br>தகைமை/தொழில்: கணனி வடிவமைப்பாளர் மற்றும் பயிற்றுவிப்பாளர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும் (ஐரோப்பிய நாடுகள்)<br>தொ.இ:G/12339 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**


# VELANAI PRADESHIYA SABHA
## Request for EXPRESSION OF INTEREST
### For Recreational Activities for Tourist at Mandaitevu Eco Tourism

1. The Chairman now invites eligible service providers to indicate their interest in providing the Recreational Activities for Tourist to implement at ECO TOURISM at Mandaitevu

2. Interested service providers must provide information indicating that they are qualified to perform the services (Broachers, description of similar assignments, experience in similar conditions, availability of appropriate skilled staffs etc). Service providers may attach documents to show their qualifications.

3. Interested Service Providers may obtain further information at the address given below from **01.02.2022 to 14.02.2022 between 9.00am to 4.00pm.**
   Address: **Chairman ,Velanai Pradeshiya Sabha, Vangalavady,velanai, Jaffna**
   Contact No: **021 221 1506, 021 221 1505,Fax No: 021 221 1506**
   Email: **velanaips@gmail.com**

4. A complete set of Expression of Interest (EOI) documents may be purchased by interested service providers on the submission of written application to the Velanai Pradeshiya Sabha, Vangalavady ,velanai, Jaffna from **01.02.2022 until 14.02.2022 from 9.00am to 3.00 pm upon payments of a non-refundable fees of Rs. 1000/-. The method of payment should be by cash.**

5. Expression of Interest shall be delivered or sent by registered post to the above address on or **before 15.02.2022 at 2.00pm.**Late EOI will be rejected. EOI will be opened soon after closing in the presence of the service providers/ representatives who choose to attend.

6. The **Chairman ,Velanai Pradeshiya Sabha** reserves the right to accept or reject any EOI.

7. **Basic requirements.**

- The service provider should ensure that he/ she should have a good business culture in Jaffna.
- The service provider should ensure that their Tourism & boating activities and operation cannot affect the Jaffna's culture and traditions.
- The service provider should ensure that they should have fully insurance arrangements for both boating assets and passengers.
- The service provider should ensure that their boating activities should be feasible for environment (should be done with environmental friendly manner)
- The service provider should keep the leisure area clean and beautiful.

**N.Karunakarakurumoorthy**
**Chairman,**
**Divisional Procurement Committee,**
**Velanai Pradeshiya sabha,**
**Vangalavady ,Velanai, Jaffna.**
**01.02.2022**

(C-3677)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நிலச்சரிவில் சிக்கி 7 குழந்தைகள் உட்பட 18 பேர் உயிரிழப்பு

## பிரேசிலில் துயரம்

(ரியோடி ஜெனிரோ)

பிரேசில் நாட்டில் தென் கிழக்கு மாநிலமான சாவ் பாவ்லாவில் பெய்த கன மழையால் ஏற்பட்ட வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் அங்கு மிகவும் கனத்த மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக பல்வேறு இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

நிலச்சரிவு மற்றும் வெள்ளத்தில் சிக்கி 18 பேர் உயிரிழந்துள்ளனர். இவர்களில் 7 பேர் குழந்தைகள் ஆவர். (நி-5)

# ஒரே குடும்பத்தை சேர்ந்த 6 பேர் சுட்டுக்கொலை

## மெக்சிக்கோவில் பயங்கரம்

(சிலாவ்)

மெக்சிக்கோ நாட்டின் குவானாஜுவாடோ மாநிலத்தில் உள்ள சிலாவ் கிராமப்புற நகராட்சி பகுதியில் உள்ள ஒரு கட்டிடத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்த நிலையில் இறந்து கிடந்தனர். அவர்களில் நான்கு பேர் ஆண்கள். இரண்டு பேர் பெண் கள்.

இது குறித்து அறிந்த பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை மேற்கொண்டனர். இந்த கொடூர செயலை செய்பவர்கள் குறித்த ஆதாரங்கள் அந்த பகுதியில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளன. கடந்த நான்கு மாதங்களில் சிலாவ் கிராமப்புற நகராட்சியில் நடத்தப்பட்ட ஐந்தாவது தாக்குதல் இது என்று அப்பகுதி அரசு வழக்கறிஞர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (நி-5)

# கட்டுப்பாட்டை இழந்த மின்சார பேருந்து

## ஐவர் உயிரிழப்பு, பலர் காயம்

(டில்லி)

உத்தர பிரதேச மாநிலத்தில் கான்பூர் பகுதியில் நடந்த மின்சார பேருந்து விபத்தில் 5 பேர் உயிரிழந்ததோடு பலர் காயமடைந்துள்ளனர்.

திடீரென கட்டுப்பாட்டை இழந்த மின்சார பேருந்து பல வீதிகள் ஒன்றுசேரும் இடத்தில் கட்டுப்பாட்டை இழந்த இந்த பேருந்து, நடந்து சென்றவர்கள் மீது மோதியது.

இதனால், சம்பவ இடத்திலேயே 5 பேர் உயிரிழந்ததுடன் மேலும் புலர் காயங்களுடன் மீட்கப்பட்டனர். (நி-5)

## 2020 இல் ஏமனில் நடைபெற்ற

# உள்நாட்டு போரில் ஈடுபடுத்தப்பட்ட சுமார் 1500 சிறுவர்கள் உயிரிழப்பு

(ஏமன்)

ஏமன் உள்நாட்டுப் போரில் ஹவுதி கிளர்ச்சியாளர்களால் 2020 இல் போரில் ஈடுபடுத்தப்பட்ட சுமார் 1.500 சிறுவர்கள் உயிரிழந்துள்ளதாக, ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

2015 ஆம் ஆண்டு கிளர்ச்சியாளர்கள் மற்றும் ஏமன் அரசுக்கு இடையே உள்நாட்டுப் போர் தொடங்கியதிலிருந்து பத்தாயிரத்திற்கும் அதிகமான சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். (நி-5)

## மாணவிகளுக்கு தனி வகுப்புகள்

# தலிபான்களின் அறிவிப்புக்குப்பின் திறக்கப்படும் பல்கலைக்கழகங்கள்



(காபூல்)

ஆப்கானின் பெரும்பாலான பகுதிகளில் ஆண்களுக்கான உயர்நிலைப் பள்ளிகளை மட்டுமே மீண்டும் திறக்கப்படும் நிலையில், மாணவிகள் வகுப்பிற்கு திரும்புவது குறித்து அறிவிப்பு வெளியாகவில்லை.

கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஆப்கானிஸ்தான் அதிகாரத்தை தலிபான்கள் கைப் பற்றியதில் இருந்து அங்கு பல்கலைக்கழகங்கள், பள்ளிகள் மூடப்பட்டன.

இந்நிலையில் காபூலில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் ஷேக் அப்துல் பாக்கி ஹக்கானி,வெப்பம் மிகுதியாக இருக்கும் மாகாணங்களில் நாளை முதல் குளிர் நிலவும் மாகா ணாங்களில் பெப்ரவரி 26 முதல் பல்கலைக் கழகங்கள் திறக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

எனினும் மாணவிகள் பள்ளிக்கு சென்று பாடம் படிக்க அனுமதிக்கப்படுமா என்பது குறித்து அவர் எதுவும் தெரிவிக்கவில்லை.

ஆப்கானிஸ்தானில் சில தனியார் பல்கலைக்கழகங்கள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

அதில் மாணவிகளுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

ஆட்சிப் பொறுப்பிற்கு பின் ஆப்கானிஸ்தானில் மாணவிகளுக்கு தனி வகுப்புகள் மூலம் பாடம் நடத்தப்படும் என்று தலிபான் அதிகாரிகள் அறிவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

### இத்தாலியின் ஜனாதிபதியாக செர்ஜியோ மெட்டரெல்லா

இரண்டாவது முறையாக தேர்வு



(வத்திக்கான்)


இத்தாலியின் ஜனாதிபதியாக செர்ஜியோ மெட்டரெல்லா, இரண்டாவது முறையாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

பிரதிநிதிகள் சபையில் 1,000 இற்கும் மேற்பட்ட சட்டமியற்றுபவர்கள் மற்றும் பிராந்திய பிரதி நிதிகள் மத்தியில் எட்டாவது சுற்று வாக்கெடுப்பில், மெட்டரெல்லா 1009 வாக்குகளில் 759 வாக்குகளைப் பெற்று மீண்டும் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். அடுத்த வாரம் முறைப் படி பதவியேற்பு விழா நடைபெறவுள்ளது.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதியான மெட்டரெல்லாவின் ஏழு ஆண்டு பதவிக்காலம், நாளை மறுதினத்துடன் முடிவடைகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# உலகில் முதல் முறையாக

## பறக்கும் படகு டுபாயில் அறிமுகம்



(டுபாய்)

உலகின் முதல் முறையாக ஹைட்ரஜன் எரிபொருள் மூலமாக இயங்கும் 'பறக்கும் படகு' டுபாயில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக வெளி நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

'தி ஜெட்' என்ற பெயருடைய பறக்கும் படகு, சுவிஸ்லாந்து நாட்டு தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் அமீரக நிறுவனத்தின் கூட்டு முயற்சியில் உருவாக்கப்பட்டுள்ளது.

சொகுசு படகாக உருவாக் கப்பட்டுள்ள இதில் 8 முதல் 12 பேர் வரை பயணம் செய்ய முடியும். தண்ணீருக்கு 80 செ.மீ உயரத்திற்கு மேல் பறந்து செல்லும்.

இதில் இரண்டு எரிபொருள் செல்கள் பொருத்தப்பட்டுள்ளது. இந்த பறக்கும் படகு மணிக்கு 75 கி.மீ வேகத்தில் செல்லும் திறனுடையது.

ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்குவதால் இதில் இருந்து புகை போன்ற உமிழ்வுகள் வெளியேறுவதில்லை.

எனவே இந்த படகு சுற்றுச் சூழலுக்கு மிகவும் உகந்ததாக இருக்கும் என அதன் தயாரிப்பாளர்கள் தெரிவித்தனர். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மன்னாரில் கவனயீர்ப்பு போராட்டம்

(மன்னார்)

**மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கனிய மண் அகழ்வு உள்ளடங்கலாக பல்வேறு நடவடிக்கைகளுக்கு எதிராக நேற்று திங்கட்கிழமை காலை மன்னாரில் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**



மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் மன்னார் மறை மாவட்டத்தின் முன்னாள் ஆயர் இராயப்பு ஜோசேப் ஆண்டகையின் சிலைக்கு முன்பாக பஜார் பகுதியில் குறித்த போராட்டம் பேரணியாக ஆரம்பமாகி மன்னார் மாவட்டச் செயலகத்தை வந்தடைந்தது. பின்னர் போராட்டக்காரர்கள் மாவட்டச் செயலகத்திற்கு முன் பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டமானது மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கனிய மண் அகழ்வு, உயர் மின் வலு காற்றாடிகளினால் ஏற்படும் பாதிப்புகள் தற்போது அமைக்கப்பட்டு வருகின்ற தரமற்ற வீதி புனரமைப்பு போதைப் பொருள் கடத்தலின் தளமாக மன்னாரை மாற்றி மன்னார் மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் நடவடிக்கைகள் போன்றவற்றிற்கு எதிர்ப்பு தெரிவித்தும் மக்களுக்கு குறித்த நடவடிக்கைகளின் பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இடம்பெற்றது.

போராட்டக்காரர்கள் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மேலிடம் தமது கோரிக்கை அடங்கிய மகஜரை கையளித்தனர். மகஜரை பெற்றுக் கொண்ட அரசாங்க அதிபர் இவ்விடயம் தொடர்பில் உரிய உயர்மட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்வதாக தெரிவித்தார். (4-5-285)

# காதலன் ஏமாற்றியதால் நஞ்சருந்திய காதலி

(குருமன்காடு)

காதலித்த இளைஞன் திருமணம் செய்ய மறுத்ததாக தெரிவித்து யுவதி ஒருவர் நஞ்சு அருந்திய நிலையில் நேற்று முன்தினம் வவுனியா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாவில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணி புரியும் குறித்த யுவதி மதவுவைத்தகுளம் பகுதியில் வாடகை வீடு ஒன்றில் தனிமையில் தங்கியிருந்துள்ளார்.

இதன்போது தொலைபேசி மூலம் அறிமுகமாகிய வவுனியா, புதுக்குளம் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞன் ஒருவரை 2 வருடமாக காதலித்துள்ளார். குறித்த இளைஞனை திருமணம் செய்யுமாறு யுவதி கோரிய நிலையில் அவர் அதற்கு மறுப்பு தெரிவித்ததுடன், பிறிதொரு பெண்ணை பதிவுத் திருமணம் செய்து விட்டதாக அந்த யுவதியிடம் தெரிவித்தார்.

இதனால் விரக்தியடைந்த யுவதி நஞ்சு அருந்திய நிலையில் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-5-250)

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவர் கைது



(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நெத்தலியாற்றுப் பகுதியில் நேற்று சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தி நடைபெறுவதாக தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து அப்பகுதி சுற்றி வளைக்கப்பட்ட போது 305 லீற்றர் கோடா மற்றும் 65 லீற்றர் கசிப்புடன் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர் என தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.எம்.சதுரங்க தெரிவித்தார். (4-5-316)

# தரமற்ற முறையில் நகர அழகுபடுத்தல் செயற்றிட்டம்

## நகரசபை உறுப்பினர் சுட்டிக்காட்டு

(சாவகச்சேரி)

நகர அபிவிருத்தி அதிகார சபையினரால் இரண்டு கோடி ரூபாய் செலவில் சாவகச்சேரி நகர்ப் பகுதியில் முன்னெடுக்கப்படும் நகர அழகுபடுத்தல் செயற்றிட்டம் திருப்தியளிக்கவில்லை எனவும் தரமானதாக தெரியவில்லை எனவும் நகரசபை உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை நகரசபையில் இடம்பெற்ற விசேட அமர்வின் போதே அவர்கள் இதனைத் தெரிவித்தனர். இது தொடர்பாக நகரசபை உறுப்பினர் க.தர்சன் கருத்துத் தெரிவிக்கையில்,

நகர அபிவிருத்தி அதிகார சபையினரால் எமது சபை எல்லைக்குள் எமது பேருந்து தரிப்பு நிலையம் நகர அழகுபடுத்தல் திட்டத்தின் கீழ் அழகுபடுத்தப்படுகிறது. அந்த திட்ட வேலைகளைக் கண்காணிப்பது யாருடைய பொறுப்பு?

குறித்த திட்டத்தில் சாவகச்சேரி பேருந்து நிலையத்தை சூழ காப்பெற் இடும் பணி இடம்பெற்றது. ஆனால் நேற்று பெய்த சிறு மழைக்குக்கூட காப்பெற்றில் நீர் தேங்கி நிற்கின்றது. இடப்பட்ட காப்பெற்றில் வெடிபபுக்களும் காணப்படுகின்றன.

இரண்டு கோடி செலவில் வந்த திட்டம். அதனை சரியாக நடைமுறைப்படுத்த வேண்டும். நகரசபை எல்லைக்குள் இடம்பெறும் திட்டம் தொடர்பாக நாமே கண்காணிக்க வேண்டும். வேலைத்திட்டம் நிறைவடைந்ததும் நகரசபை தான் அதற்கு பொறுப்பாளி.



எனவே குறித்த வேலைத் திட்டம் தொடர்பாக நகரசபை கண்காணித்து அதன் குறை நிறைகள் தொடர்பாக உரிய தரப்பிடம் சுட்டிக்காட்டி அதனை சீர் செய்ய வேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார். (4-5-30)



மாணவர்களின் வாசிப்பு திறனை வலுப்படுத்தும் நோக்கில் தேசிய லொத்தர் சபையின் பணிப்பாளர் டி.டி.ஜயசிறியால் யாழ்.கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இருந்து தலா ஒரு பாடசாலை வீதம் தெரிவு செய்யப்பட்டு அங்கு நூலக அபிவிருத்திக்கென நிதி வழங்கி வைக்கப்பட்டது.



அலியான்ஸ் ஆயுள் காப்புறுதி நிறுவனத்தின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்.வலம்புரி விடுதியில் இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சைகள் உரிய காலத்தில் நடத்தப்பட வேண்டும்

## மருத்துவ நிபுணர்கள் சங்கம்

(கொழும்பு)

**ஒமிக்ரோன் திரிபு தீவிரவமாக பரவி வரும் நிலையில் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை ஒத்தி வைத்தால், நீண்ட காலத்திற்கு அந்த பரீட்சையை நடத்த முடியாது என விசேட மருத்துவ நிபுணர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

ஒத்தி வைக்கப்படக்கூடியவை எவை, ஒத்தி வைக்கப்பட முடியாதவை எவை? என்பதனை கருத்திற் கொண்டு அதன் அடிப்படையில் அவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென விசேட மருத்துவ நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் லக்குமார் பெர்னாண்டோ தெரிவித்தார்.

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவ, மாணவியர் மட்டுமன்றி ஏனைய தரங்களில் கற்கும் மாணவ, மாணவியரின் பாதுகாப்பை உறுதி செய்ய இணையவழி கற்பித்தல் நடைமுறை பொருத்தமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். 2021 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெப்ரவரி 7 ஆம் திகதி முதல் மார்ச் 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



### விரதங்கள்

## சூரிய நாராயண பூஜை



பசுவைத் தெய்வமாக வழிபட்டால் கோலோகத்தை அடையும் பாக்கியம் உண்டாகும். வீட்டில் கோபூஜை நடத்த முடியாதவர்கள் அருகில் உள்ள பசு பராமரிப்பு இடங்களிலும், வழிபாட்டிலும் கலந்து கொள்ளலாம். தினமும் பூஜை செய்ய முடியாவிட்டால் வெள்ளிக் கிழமைதோறும் பூஜை செய்ய வேண்டும். ஆலயங்களில் நடைபெறும் கோபூஜைகளில் கலந்து கொள்ளலாம்.

### கோபூஜை செய்வது ஏன்?

திருமால் கண்ணனாக அவதரித்தார். ஒருமுறை ஆயர்பாடியில் மழையின்றி கடும் பஞ்சம் ஏற்பட்டது. ஆயர்கள் இந்திரனை வழிபடுவதை விட்டு கோவர்த்தன மலைக்கு பூஜை நடத்தி விழா நடத்தினர்.இதைப் பார்த்த மழைக்கு அதிபதியான இந்திரனுக்கு கடும் கோபம் வந்தது. கோகுலத்தில் பெரும் மழை பெய்வித்து ஆநிரைகளுக்கும், ஆயர்களுக்கும் துன்பம் உண்டாக்கினார். ஆயர்கள் அபயக்குரல் எழுப்பினர்.

கண்ணபிரான் கோவர்த்தன மலையை குடையாக தாங்கிப்பிடித்து ஆயர்களையும், ஆநிரைகளையும் காத்தார். இந்திரன், கண்ணனிடம் மன்னிப்புக் கேட்டு தன் பிழையை பொறுத்தருளும்படி வேண்டினார். தன்னையும், மக்கள் வணங்கும்படி கேட்டுக் கொண்டார். கண்ணன், இந்திரனின் பிழையை பொறுத்து பொங்கலுக்கு முன்தினம் இந்திரனுக்கு விழாவும் கொண்டாடுவர் என்று கூறினார். போகியன்று இந்திரனையும், பொங்கலன்று சூரியனை நாராயணராக கருதி பூஜித்தும், பின்னர் மாடுகளையும், கன்றுகளையும் வழிபடுவர்.

மீண்டும் ஒரு முறை நெய் தீபத்தால் ஆரத்தி செய்ய வேண்டும். பிறகு 3 முறை வலம் வந்து விழுந்து வணங்க வேண்டும். வீட்டில் பசு இல்லாதவர்கள் தினமும் ஏதாவது ஒரு பசுவிற்கு அருகம்புல், அகத்திக்கீரை, வாழைப் பழம் ஆகியவற்றை தீவனமாக கொடுத்தாலும் கோ பூஜை செய்த பலன் கிடைக்கும். கோபூஜையின் போது தாயை கன்றுடன் சேர்த்தே பூஜிக்க வேண்டும். வெளியில் மேய்ந்து வரும் கோமாதாக்களுக்கு வீட்டின் அல்லது தோட்டத்தின் வெளிப்புறம் தண்ணீர் தொட்டி வைக்கலாம். பாற்கடலில் பிறந்த ஐந்து பசுக்களும் கோலோகத்தில் இருந்து அருள் புரிவதாக ஐதீகம்.

(முற்றும்)

# செய்தித்துளிகள்

## 20 அடி பள்ளத்தில் பாய்ந்த வான் 9 பேர் மருத்துவமனையில் அனுமதி

(ஹற்றன்)

டிக்கோயா கிளங்கன் ஆதார மருத்துவமனையில் பணிபுரியும் ஊழியர்கள் பயணித்த வான் ஒன்று 20 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியதில்9 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் ஹற்றன் பொகவந்தலாவ பிரதான வீதியில் நேற்று முன்தினம் மாலை 6.45 மணியளவில் இடம்பெற்றது.

குறித்த தனியார் வான் பலத்த சேதங்களுக்கு உள்ளாகியுள்ளது. இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (நி-5)

## மரம் வெட்டும் இயந்திரத்தால் வெட்டிக்கொலை செய்தவர் கைது

(கொழும்பு)

தனிப்பட்ட முரண்பாடு காரணமாக நபரொருவரின் கால்களை மரம் வெட்டும் இயந்திரத்தால் வெட்டி, பலத்த காயங்களுக்கு உள்ளாக்கி கொலை செய்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹங்கொட பகுதியில் இந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

சம்பவத்தில் காயமடைந்த நபர் பேராதனை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் கலகெதர பகுதியைச் சேர்ந்த 32 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுகஸ்தோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 350 | 350 |
| உருளைக்கிழங்கு | 165 | 140 | 200 |
| பச்சைமிளகாய் | 450 | 500 | 500 |
| தக்காளி | 160 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 50 |
| கோவா | 220 | 240 | 300 |
| கரட் | 450 | 480 | 500 |
| பூசணி | 150 | 140 | 160 |
| புடோல் | 200 | 200 | 300 |
| வாழைக்காய் | 80 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 250 | 400 |
| பெரிய வெங்காயம் | 150 | 140 | 200 |
| பாகற்காய் | 400 | 300 | 350 |
| வெண்டிக்காய் | 240 | 200 | 280 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 |
| பயற்றங்காய் | 450 | 500 | 300 |
| லீக்ஸ் | 220 | 250 | 300 |
| பீற்றூட் | 300 | 300 | 320 |
| கறிமிளகாய் | 550 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 1200 | 800 | -- |
| போஞ்சி | 350 | 300 | 300 |
| கத்தரிதம்புள்ள | 300 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 70 | 80 | 80 |
| தேசிக்காய் | 150 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70-90 |
| இராசவள்ளி | 250 | 180 | 220 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 300 |
| முள்ளங்கி | 80 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 60 |
| வல்லாரை | 20 | 30 | 40 |
| ஈரப்பலா | 120 | 80 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 500 பேர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

(கொழும்பு)

**நாட்டில் ஆண்டுதோறும் நீரில் மூழ்கி 500 பேர் வரையில் உயிரிழப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

பண்டாரவளை - அட்டம்பிட்டி கொரண்டி எல்ல பிரதேசத்தில் நீராடச் சென்று ஐந்து பேர் உயிரிழந்த சம்பவத்தைத் தொடர்ந்து இந்த விடயம் தெரியவந்துள்ளது.

இந்த ஆண்டில் இதுவரையில் நீரில் மூழ்கி 37 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர். கடந்த காலங்களில் கொவிட் பெருந்தொற்று காரணமாக வீடுகளில் முடங்கியிருந்த மக்கள், தங்களது உறவினர்களுடன் சுற்றுலா செல்லத் தொடங்கியுள்ளனர்.

இவ்வாறு சுற்றுலா செல்லும் போது மக்கள் கவனயீனமாக நீராடச் செல்லும் காரணத்தினால் மரணங்கள் ஆண்டுதோறும் சம்பவிப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார். (நி-5)

# காட்டுப் பகுதிகளுக்கு விசமிகளால் தீ 50 ஏக்கர் எரிந்து நாசம்!

(நுவரெலியா)

டெவோன் நீர்வீழ்ச்சிக்கு அண்மித்த காட்டுப்பகுதிக்கு இனம்தெரியாத விசமிகளால் தீ வைக்கப்பட்டதன் காரணமாக நீர்வீழ்ச்சியை சுற்றியுள்ள பகுதியில் சுமார் 50 ஏக்கர் வரை தீயினால் எரிந்து நாசமாகியுள்ளது.



வரட்சியான காலநிலையினை அடுத்து மலையக நீர்ப்போசன பிரதேசங்களுக்கு சமீபமாக நீரேந்தும் பிரதேசங்களிலுள்ள காட்டுப் பகுதிகளுக்கு இனந்தெரியாத விசமிகளால் தொடர்ச்சியாக தீ வைத்து வருவதனால் பாரிய அளவில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

குறித்த பிரதேசங்களுக்கு தீ வைத்ததன் காரணமாக அப்பகுதியில் உள்ள நீர் ஊற்றுக்கள் அற்றுப்போவதுடன் சிறிய வகை உயிரினங்கள், எமது பிரதேசத்திற்கே உரித்தான அரிய வகை தாவரங்கள், பெறுமதிமிக்க மரக்கன்றுகள் ஆகியன அழிவடையும் நிலையினை எதிர்நோக்கியுள்ளன.

இதேநேரம் நீர்ப்போசனை பிரதேசங்களில் உள்ள காட்டுப்பகுதிக்கு தீ வைப்பதனால் தேசிய மின் உற்பத்திக்கும் பாதிப்பு ஏற்படலாம். எனவே காடுகளுக்கு தீ வைப்பவர்களை உடன் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். மிருகங்களை வேட்டையாடுவதற்கும் பொழுது போக்குக்காகவும் குறித்த காட்டுப் பகுதிகளுக்கு சில விசமிகளால் தீ வைக்கப்படுவதாக பாதுகாப்பு தரப்பு தெரிவிக்கின்றனர்.

எனவே, வனப்பகுதிகளை விசமிகளிடமிருந்து பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (நி-5)

# நாடளாவிய ரீதியில் நடமாடும் தடுப்பூசி திட்டம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நேற்று முதல் நடமாடும் தடுப்பூசித் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

பொது இடங்கள் மற்றும் அரச நிறுவனங்களில் இந்த திட்டத்தை மேற்கொள்ள முப்படையினர் ஈடுபடுத்தப் படுவார்கள் என அவர் தெரிவித்தார்.

நாட்டில் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளதால், கடந்த சில நாட்களாக பூஸ்டரை பெற்றுக் கொள்ள மக்கள் தாமதம் காட்டுகின்றனர்.

தற்போது நிலைமை வேறுவிதமாக உள்ள காரணத்தினால் அனைவரும் விரைவிவாக பூஸ்டரை பெற்றுக்கொள்ள வேண்டும் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா கேட்டுக்கொண்டார். (நி-5)

# நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் மின்பிறப்பாக்கி சீர்செய்யப்பட்டது

(கொழும்பு)

நுரைச்சோலை லக்விஜய அனல்மின் நிலையத்தின் செயலிழந்த மின்பிறப்பாக்கி சீர் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் அன்ட்ரூ நவமணி தெரிவித்தார்.

இந்நிலையில் குறித்த மின்பிறப்பாக்கி சீர்செய்யப்பட்டு தற்போது 160 மெகாவோல்ட் மின்சாரம் தேசிய மின் கட்டமைப்பில் இணைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

900 மெகாவோல்ட் உற்பத்தி செய்யும் குறித்த மின் உற்பத்தி நிலையத்தின் 300 மெகாவோல்ட் மின் சாரத்தை வழங்கும் மின் பிறப்பாக்கி கடந்த டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி செயலிழந்ததமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# இன்று ஒரு தகவல்

## நேரடியாக விடயத்திற்கு

நமக்கு ஆகவேண்டிய, ஒரு வேலை காரணமாக ஒருவரை காணப் போகிறோம்; அல்லது தொலைபேசி மூலம் தொடர்பு கொள்கிறோம்; அல்லது கடிதம் எழுதுகிறோம்.

இம் முயற்சியில் சம்பிரதாயமான சில விசாரிப்புகளை முடித்துக்கொண்டு நேரடியாய் விடயத்திற்கு வரவேண்டும்.

அதை விட்டுவிட்டு, அவர்களை ஏகமாய்ப் புகழ்வதோ, சும்மா பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன் என்பதோ, இப்போது தான் ஞாபகம் வருகிறது என்று செயற்கை இழையோட விடயத்தை வெளியிடுவதோ, சுற்றி வளைத்துப் பேசுவதோ வெற்றியைத் தராது.

உடல்நிலை சரியில்லாத ஒருவரிடம், கைமாற்று வாங்க மற்றொருவர் போகிறார் என்று வைத்துக்கொள்வோம்.

"உங்களுக்கு உடல்நிலை சரியில்லை என்று கேள்விப்பட்டுத் துடித்துவிட்டேன். எனக்கு வீட்டில் இருப்புக் கொள்ளவில்லை." என்றெல்லாம் சினிமா வசனம் பேசிவிட்டு, "நூறு ரூபாய் கடனாகத் தரமுடியுமா?" என்று கேட்டு வைத்தால் அவரது கபட நாடகம் நோயாளிக்குப் புரியாமலா போகும்?

மாறாக, "எனக்குப் பணக் கஷ்டம், அதனால் உங்களைப் பார்க்க வந்தேன். அப்படியே உங்கள் உடல்நலம் பற்றி விசாரிக்க வாய்ப்பாக இருக்கும் என்று எண்ணினேன்." என்று உண்மை நிலையை விளக்கிவிட்டால், காரியம் கைகூடுவதற்கான வாய்ப்புக்கள் ஒருவேளை அதிகமாகும்.

வராத ஒருவர் வந்துவிட்டுப் போன பின், இந்த மனிதர் ஏன் வந்தார் என மனிதமனம் அசைபோடுவது இயல்பு.

அந்த நிமிடத்தில் சாராம்சம்தான் நிற்குமே தவிர, நெளிவு, சுளிவு, குழைவு, பாராட்டு, செயற்கையான அன்பு, புத்திசாலித்தனமான அணுகுமுறைகள் ஆகிய அனைத்தும் அடிபட்டுப் போகும்.

நேரடியாக விடயத்துக்கு வராமல், ஜால்ரா தட்டியும் துதிபாடியும் வம்பளந்தும் பொழுதைப் போக்கிக் கொண்டிருக்கையில்

அடுத்தவரது மனம் அவற்றில் ஒருக்காலும் லயிக்காது.

மாறாக,

'இந்த மனிதர் எதற்காக வந்து இதையெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறார்' என்பதிலேயே அவரது கவனம் இருக்கும்.

சொல்லிக்கொண்டு கிளம்புகையில், விடயத்தை வெளிப்படுத்தும்போது, 'ஓகோ அத்தனையும் இதற்குத்தானா?' என்ற முடிவுக்கு வருவார். வெறுப்பும் வேதனையுமே மிஞ்சும். முடிவு சாதகமாக இராது என்று சொல்லத் தேவையில்லை.

நேரடியாய் விடயத்தில் வந்து, காரியம் கைகூடாவிட்டாலும்,

நம்முடைய நேர்மைக்காக, உள்ளம் திறந்து பேசியதற்காக மற்றவர்கள் இதயத்தில் ஒரு சிறு மூலையேனும் ஒதுக்கப்படும்.

அது ஒன்று போதும்!

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## விண்வெளித் திருவிழாவில் ஆமை


விலங்குகளின் பேரரசில் கடுமையான பஞ்சம் ஏற்பட்டது. இஜபா என்ற ஆமை சாப்பிடுவதற்கு எதுவும் கிடைக்காமல் திண்டாடியது. அதே சமயத்தில் பறவைகள் விண்வெளியில் திருவிழாக் கொண்டாட ஏற்பாடு செய்து கொண்டிருந்தன. ஆண்டுதோறும் பறவைகள் இந்த திருவிழாவைக் கொண்டாடும். அதில் எல்லாப் பறவைகளும் கலந்து கொள்ளும்.

அப்போது சுவையான உணவு எல்லோருக்கும் வழங்கப்படும். வானத்தில் நடக்கும் இந்த விழாவில் தானும் கலந்து கொள்ள முடிந்தால் எப்படி இருக்கும் என்று இஜபா என்ற ஆமை யோசித்தது.

ஆனால் பறந்து செல்வதற்கு தன்னிடம் இறக்கை இல்லையே என்று அதற்கு ஏமாற்றமாக இருந்தது.

இருந்தாலும் ஆமை இந்த வாய்ப்பை தவற விடுவதாக இல்லை. ஒவ்வொரு பறவையிடமும் சென்று தனக்குக் கொஞ்சம் இறகுகளைக் கொடுக்குமாறு கெஞ்சிக் கேட்டது. எல்லாப் பறவைகளிடம் இருந்து ஒன்றிரண்டு இறகுகளைப் பெற்ற ஆமை, அனைத்தையும் சேர்த்து தன் உடம்பு முழுக்க மறையும் அளவிற்கு வைத்துக் கட்டிக் கொண்டது.

எல்லாப் பறவைகளின் விதவிதமான வண்ண இறகுகள் இருந்ததால் அந்த ஆமை உலகிலேயே மிக அழகான பறவை போல தோற்றம் பெற்று விட்டது. அழகிய இறக்கைகள் கிடைத்து விட்டதால் ஆமையும் பறவைகளுடன் விண்வெளிவிழாவில் நடக்கும் விருந்துக்கு பறந்து சென்றது.



புதிய பறவை ஒன்று வருவதைப் பார்த்த மற்றப் பறவைகள் "நீ யார்? நீ யார்?" என்று இஜபாவிடம் கேட்டன. பறவை வேடமிட்ட ஆமை, "என் பெயர் தேவதை"என்று சொன்னது.

விண்வெளியில் விருந்துக்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு ருசியான உணவு வகைகள் மேசை மீது வைக்கப்பட்டிருந்தன.

அதைப் பார்த்து விட்டு நாவில் எச்சில் ஊற, "இதெல்லாம் யாருக்கு?" என்று பறவை வேடமிட்ட ஆமை கேட்டது. "இது எல்லாமே தேவதைக்குப் படைக்கப்படுவது" என்று மற்றப் பறவைகள் சொல்லின.

(தொடரும்)

# கம்பராமாயணம்




### கோசல நாடு

மானுடத்தின் வெற்றியை உலகுக்கு உணர்த்திய முதல் தெய்வ மகன் இராமன்; அவன் அவதரித்த அழகிய திருநாடு கோசல நாடு. அது பழம் பெருமைமிக்கது; அதைச் சத்திய விரதன் ஆகிய தசரதன், சக்கரவர்த்தி என்ற பெருமையோடு ஆண்டு வந்தான். அவன் உதித்த குலம் சூரிய குலம் என்பர்.

மனு என்பவனும் இக்குலத்தில் பிறந்தவனே. மக்களை நன்னெறிப்படுத்த நீதி நெறிகளை வகுத்துக் கொடுத்தவன் இவன். மழைவளம் குன்றி, மண்வளம் குறைந்த மகிதலத்துக்கு விண்ணுலகினின்று கங்கையை வரவழைத்த பகீரதனும் இக்குலத்தில் தோன்றியவனே. அவனுடைய விடா முயற்சியை மாநிலம் போற்றுகிறது. அரிதின் முயன்று ஆற்றும் செயலுக்குப் பகீரதப் பிரயத்தனம் என்ற தொடர் இன்றும் வழங்குகிறது.

இச்சுவாகு என்ற அரசனின் மெச்சத்தக்க புகழ் இன்றும் பேசப்படுகிறது. அவனால் இக்குலம் "இச்சுவாகு குலம்" என்று நச்சி உலகம் போற்றுகிறது. காகுத்தன் என்பவன் தேவர்களின் ஆகுலங் களைத் தீர்த்தவன்; அவர்கள் குறை கேட்டு அசுரர்களோடு போராடி அவர்கள் வாழ்வை மலரச் செய்தவன். பெருமை மிக்க இக்குலத்தில் பிறந்ததால் இவனைக் "காகுத்தன்" என்றும் அழைத்தனர்.

ரகு என்ற அரசனும் இக்குலத்திற்குப் பெருமை சேர்த்தவர்களுள் ஒருவன்; அதனால் இராமனை, "இரகுராமன்" என்றும், "இரகுகுல திலகன்" என்றும் அழைத்து வந்தனர். நீதியும் நேர்மையும் வீரமும் பேராற்றலும் மிக்க மன்னர் இராமனின் குல முதல்வர்களாய்த் திகழ்ந்தனர். இராமன் பிறந்ததால் இக்குலமும் உயர்வு பெற்றது; இக்குலத்தின் பெருமையால் இராமனும் உயர்வு பெற்றான்.

### நாட்டு வளம்

மழை வளம் குறைந்தால் நாட்டின் வளம் மறைந்து விடும். கோசல நாட்டில் பருவ மழை தவறாது பெய்தது. வெள்ளிப் பனி மலை மீது உலவிய கரிய மேகங்கள் அள்ளிப் பொழிந்த மழை நீர் வெள்ளமாகப் பெருக்கெடுத்தது; அது சரயூ நதியாகப் பாய்ந்தது.

மலைபடு பொருள்களாகிய மணியும் பொன்னும் முத்தும் சந்தனமும் அகிலும் தேக்கும் அவ்வெள்ளம் அடித்து வர அலைபடு பொருள்கள் ஆயின. வணிக மக்களைப் போல அந்நதி இப் பொருள்களை வாரி அடித்துக் கொண்டு வந்தது. நீள் நதி அந்த மலையின் உச்சியையும் அகலத்தையும் தழுவி வந்ததால் அது கணிகை மகளை ஒத்திருந்தது.

அலைக் கரத்தில் மலைப் பொருள்களை ஏந்தி வந்து அடிவாரத்தில் குவித்தது. சரயூநதி, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகை நிலங்களில் பாய்ந்தது; இந்நாட்டை வளப்படுத்தியது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானையைப் பார்த்த குருடனைப் போல் மூடங்கள்.
– முதுமொழி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் மக்களின் மனநிலையை புரியாத தமிழ் அரசியல்வாதிகள்

உன்னையே நீ அறிவாய் என்றார் சேக்ஸ்பியர். ஒவ்வொருவரும் முதலில் தன்னைத் தான் அறிய வேண்டும்.

இந்தத் தத்துவத்தை எங்கள் தவத்திரு யோகர் சுவாமிகள்,

என்னை எனக்கு அறிவித்தான் எங்கள் குருநாதன் என்று பாடிப் பரவுவார்.

தன்னைத்தான் அறிதலும் என்னை எனக்கு அறியப்படுத்தலும் ஒரியல்பு கொண்டவை.

ஆக, தன்னைத்தான் அறிய வேண்டும். இல்லையேல் தன்னைத் தனக்கு அறியப் படுத்தக்கூடிய குருநாதரைத் தேடிக் கண்டறிய வேண்டும்.

இதைச் செய்யாவிடின் மாயை எனும் பிரமைக்குள் கிடந்து அழுந்த வேண்டிவரும்.

தன்னைத்தான் அறிகின்ற அறிவைப் பெறுவது மெய்ஞானம் என்பதோடு உன்னையே நீ அறிவாய் என்ற விடயத்தை ஒத்திவைக்கலாம்.

இனி, பிறரை அறிவது பற்றியது. அதாவது பொதுவாழ்க்கையில் இருக்கக்கூடிய ஒருவர் மற்றவர்களை அறிந்து கொள்வது மிகவும் அவசியமானது.

மற்றவர்களை – அவர்களின் மனநிலையை அறியாத எவராலும் ஆளுமைமிக்க தலைமைத்துவத்தை – நிர்வாகத்தை வழங்கிவிட முடியாது.

இதனையே மெய்ப்பொருள் காண்பது என்றார் வள்ளுவர்.

யார் எதைக் கூறினாலும் அதன் உண்மைப்பொருளைக் கண்டறிவதே அறிவு ஞானமாகும்.

ஆக, மற்றவர்களை இனங்கண்டு கொள்வது – அவர்களின் நோக்கத்தைப் புரிந்து கொள்வது – அவர்களின் மனநிலையை விளங்கிக் கொள்வது என்பன இங்கு மிகவும் முக்கியமானதாகும்.

ஆசிரியர் தன்னிடம் கற்கின்ற மாணவர்களைப் புரிந்து கொள்ள வேண்டும். மருத்துவர் தன்னிடம் சிகிச்சை பெறும் நோயாளர்களின் தன்மையைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு நிர்வாகி தனது பணியாளர்களின் வேறுபட்ட இயல்புகளை விளங்கிக் கொள்வது அவசியம்.

அரசியல்வாதியோ பொதுமக்களின் மன நிலை எப்படியாக இருக்கிறது, அவர்கள் என்ன நினைக்கிறார்கள். அவர்களின் கருத்து நிலைக்கேற்ப எனது அரசியல் செயற்பாடு அமைந்துள்ளதா? என்பவற்றை உணர்ந்தறிதல் வேண்டும்.

அப்போதுதான் குறித்த அரசியல்வாதியால் அரசியல் களத்தில் – மக்கள் பணியில் நின்று நிலைக்க முடியும்.

இதைக்கூறும்போதுதான் எங்கள் தமிழ் அரசியல்வாதிகள் எவருக்கும் தமிழ் மக்களின் மனநிலை புரியவில்லை என்பதை இங்கு அறுதியிட்டுக் கூறமுடியும்.

ஆம், தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் தமிழ் அரசியல்வாதிகள் மீது கடும் கோபம் கொண்டுள்ளனர்.

தமிழ் அரசியல்வாதிகளை அவர்கள் ஒரு பொருட்டாகக் கருதவேயில்லை.

அரசியலைப் பற்றிப் பேசுவது வீண் என்று முடிவு செய்துள்ளனர். இதையும் மிஞ்சி யாரேனும் அரசியல் பேசினால், அவரைக் கண்டால் அந்த இடத்தை விட்டே ஓடிவிட வேண்டும் என்று நினைக்கின்றனர்.

இதுதான் இன்றைய தமிழ் அரசியல் குறித்த எம் மக்களின் நிலைப்பாடு.

இதைப் புரிந்து கொள்ளாத தமிழ் அரசியல்வாதிகளால் என்னதான் செய்ய முடியும்.

# அனைத்து விவசாயிகளுக்கும் அரசு நிவாரணம் வழங்கவேண்டும்

### ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் உள்ள சகல விவசாயிகளுக்கும் ராஜபக்ஷ அரசாங்கம் நிவாரணம் வழங்க வேண்டும் என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் உள்ள 22 இலட்சம் விவசாயிகள், ராஜபக்ஷ அரசாங்கத்தின் புத்திசாலித்தனமற்ற தீர்மானம் காரணமாக பாரிய அழிவுகளைச் சந்தித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்படும் என அரசாங்கம் தெரிவித்துள்ள நிலையில், நிவாரணம் என்ற சொல்லில் அரசாங்கம் பிழை விட்டிருப்பதை ஏற்றுக்கொண்டிருப்பது புலனாகிறது.

தமது பிழைகளை அரசாங்கமே ஏற்றுக் கொண்டுள்ளது. நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு நிவாரணங்களை வழங்குவதன் மூலம் செய்த பிழையினை சரி செய்து விட முடியாது.

இதன் மூலம் தற்காலிகமாக விவசாயிகளை ஆசுவாசப்படுத்துவதற்கு அரசாங்கம் முயன்றுள்ளது. இது மிகப்பெரிய பிரச்சினை. இதற்கான பொறுப்பை அரசாங்கம் ஏற்க வேண்டும். நாட்டில் இப்படி ஒரு விவசாய பேரழிவு மீண்டும் ஏற்படாத வகையில் அரசாங்கம் தீர்மானங்களை எட்ட வேண்டும் என்றார்.

அரசாங்கம் வழங்குகின்ற நிவாரணம் தொடர்பில் விவசாயிகள் அதிருப்தி அடைந்துள்ளனர். வெறுமனே நெல் உற்பத்தி விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவதை விடுத்து சகல விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும். (ம)

# ஊடகவியலாளர் மீது சாவகச்சேரியில் தாக்குதல்

(சாவகச்சேரி)

கச்சாய் வீதியில் ஊடகவியலாளர் ஒருவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கச்சாய் வீதி மின்சார சபையை அண்மித்த பகுதியிலேயே நேற்று மதியம் வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்ற ஊடகவியலாளர் மீது வானில் வந்தோர் தாக்குதல் நடத்திவிட்டு தப்பித்துச் சென்றிருப்பதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரியைச் சேர்ந்த தவராசா சுபேசன் என்ற 27 வயதான ஊடகவியலாளரே முகம் மற்றும் கைகளில் தாக்குதலுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற அமர்வில் கலந்து கொண்ட பின்னர் கச்சாய் வீதி ஊடாக சென்ற ஊடகவியலாளரை மோதிக் காயப்படுத்தும் வகையில் வான் ஒன்று ஊடகவியலாளர் பயணித்த மோட்டார் சைக்கிளின் முன்பாக நிறுத்தப்பட்டுள்ளது.

பின்னர் வானில் இருந்தவர்களில் ஒருவர் பொல்லு மற்றும் கல் ஆகியவற்றால் ஊடகவியலாளரை தாக்கி கொலை மிரட்டல் விடுத்துவிட்டு வானில் ஏறி தப்பித்துச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ம-18,30,33)

# வல்லிபுர ஆழ்வாரின் கொடியேற்றம் இன்று

(கரணவாய்)

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவிலின் சென்ற வருடத்திற்கான பெருந்திருவிழா இன்று 1 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. இப் பெருந்திருவிழா தொடர்ந்து 17 தினங்கள் நடைபெறவுள்ளது.

சப்பரத்திருவிழா 14 ஆம் திகதி திங்கட்கிழமையும் தேர்த் திருவிழா 15 ஆம் திகதி செவ்வாய்க் கிழமையும் சமுத்திரத் தீர்த்தத் திருவிழா 16 ஆம் திகதி புதன்கிழமையும் கேணித்திருவிழா 17 ஆம் திகதி வியாழக் கிழமையும் அன்று மாலை கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளன.

கடந்த வருடம் புரட்டாதி மாதம் நடைபெற வேண்டிய பெருந் திருவிழா கடுமையான கொரோனாத் தொற்றுக் காரணமாக இவ்வருடம் பெப்ரவரி மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-60)

# கட்டைக்காடு செல்லும் இ.போ.ச. சீரில்லை

### நடவடிக்கை எடுக்குமாறு உரிய தரப்பிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கட்டைக்காடு செல்லும் இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்தின் சீரற்ற நடைமுறையால் பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள், ஆசிரியர்கள் பெரும் சிரமத்துக்குள்ளாகின்றனர்.

குறித்த பேருந்து உரிய நேரத்திற்கு வருகை தராததோடு சில வேளைகளில் சேவையில் ஈடுபடுவதில்லை என பொதுமக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

எனவே உரிய தரப்பினர் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## ஆன்மிக ஒளி வீசினால் முகம் தெய்வீகமாகும்

❖ அக மற்றும் புறத் தூய்மையில் நிலைபெற்றவனுக்குத் தன் உடல் மீது வெறுப்பும், பிறருடன் உடல் தொடர்பின்மையும் உண்டாகும்.

❖ அகமும் புறமும் தூய்மை பெற்ற பிறகு உடலைப் புறக்கணிக்க நேர்கிறது. அதை அழகுபடுத்த வேண்டும் என்ற எண்ணம் மறைகிறது. மிகவும் அழகிய முகம் என்று பிறர் கூறுகின்ற ஒரு முகம், அதில் அறிவு ஒளி வீசாவிட்டால், ஒரு விலங்கின் முகம் போலவே யோகிக்குத் தெரியும். ஆன்மிக ஒளி வீசினால் மற்றவர் மிகச் சாதாரண முகம் என்று சொல்லும் முகத்தையும் யோகி தெய்வீகமாகக் கொண்டாடுகிறான்.

❖ உடலின் மீதுள்ள இந்த மோகம் மனித வாழ்க்கையில் ஒரு சாபக்கேடு. எனவே, தூய்மையில் நிலைபெற்றிருப்பதன் முதல் அறிகுறி, நீங்கள் உங்களை உடல் என்று எண்ணாமல் இருப்பதே. தூய்மை வரும் போது தான் நாம் உடல் உணர்வை விட முடியும்.

❖ தூய்மையைப் பழகுவதால் சத்துவப்பொருள் மேலோங்குகிறது. மனம் குவிந்து உற்சாகம் பெறுகிறது. நீங்கள் ஆன்மிகப் பாதையில் சென்று கொண்டிருக்கிறீர்கள் என்பதற்கு முதல் அடையாளம் உற்சாகம் பெறுவதே. முகத்தை தொங்கவிட்டுக் கொண்டிருப்பது அஜீரணத்தின் விளைவாக இருக்கலாம். அது ஆன்மிகம் ஆகாது. சத்துவத்தின் இயல்பே ஆனந்த உல்லாசம் தான்.

❖ சாத்வீக மனிதனுக்கு எல்லாமே இன்பம் தருபவை தான். இந்த உணர்ச்சி வரும் போது நீங்கள் யோகத்தில் முன்னேறுகிறீர்கள் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி II

67

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



### குறுணி

'குறுணி' என்னும் சொல் மரக்கால் குறித்துப் பல்லவ, சோழர் ஆட்சி காலங்களில் வழக்கில் இருந்துள்ளது. கல்வெட்டுகள் இச்சொல்லிற்கு 'ங'கர வடிவத்தைத் தந்துள்ளன. ஒரு மரக்கால் நெல் விதைக்கக்கூடிய நிலம் குறுணிப்பாடு என்று தமிழ்ப் பேரகராதி (1054) கூறுகிறது.

மக்கள் மூன்று மரக்கால் தானிய அளவை மூன்று மரக்கால் தானியம் என்று கூறாமல் முக்குறுணி என்று அழைக்கின்றனர். அத்தகைய குறுணி என்னும் சொல் முகத்தலளவைக் குறித்து இன்றளவும் மக்கள் வழக்கில் இருந்து வருவதைக் காண முடிகிறது.

### குளகம்

குளகம் என்பது மரக்காலைக் குறிக்கும் வேறு சொல்லாகும். இது ஆழாக்கு என்னும் முகத்தலளவையும் குறிக்கும் எனத் தமிழ்ப் பேரகராதியில் (1032) குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆழாக்கு என்பது நாழி என்னும் கருவியில் எட்டில் ஒரு பகுதியாகும். அத்தகைய குளகம் என்னும் அளவை நாயக்கர் ஆட்சியில் தருமபுரி மாவட்ட வழக்கில் இருந்துள்ளதைக் கல்வெட்டுக் கலைச சொல் அகரமுதலி (473) குறிப்பிட்டுள்ளது. மேலும் அவ்வகராதி அது தானியம் அளக்கும் அளவைகளில் பெரியது எனவும் அதாவது கலம் என்னும் அளவை போன்றது எனவும் கூறுவதன் மூலம் அறியலாம்.

### தூம்பு

தூம்பு என்னும் சொல் மரக்கால் என்னும் முகத்தலளவை மட்டும் குறிக்காமல் மூங்கில் மரத்தையும் குறிக்கிறது. எனவே மூங்கிலைக் கொண்டு இக்கருவி செய்யப் பெற்றதனால் இப்பெயர் பெற்றிருக்கலாம். அத்தகைய தூம்பு என்னும் அளவுக் கருவி பல்லவர் கால வழக்கில் இருந்துள்ளது. இதனைப், "பெரிய மரக்கால், பூண் கட்டியது. (பல்லவர் ஆட்சியில் தொண்டை மண்டலத்தில் நெல் அளவிற்குரியதாக அமைக்கப்பட்ட மரக்கால்)" என்று கல்வெட்டுக் கலைச்சொல் அகரமுதனி (273) என்று கூறுவதன் மூலம் அறிய முடிகிறது.

### கச்சம்

பிங்கலம் (10:232), சூடாமணி (11:31), திவாகரம் (7:183) ஆகிய நிகண்டுகள் கச்சம் என்னும் சொல்லுக்கு மரக்கால் என்னும் பொருளைத் தருகின்றன. இது ஒருவகைப் பேரளவு என்று சீவகசிந்தாமணி (2219:2) கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது. இங்கு இது எண்ணல் அளவைக் குறிக்கிறது.

அத்தகைய அளவைக் குறிக்கும் கச்சம் என்னும் சொல்லானது ஆமை என்னும் உயிரினத்தையும் குறிக்கும். ஆதலால் ஆமையின் உருவ வடிவத்தைப் போன்று இக்கருவி இருத்தலால் இப்பெயர் பெற்றிருக்கலாம்.

### வள்ளம்

வள்ளம் என்னும் சொல் மரக்காலின் வேறு பெயராக இன்றளவும் கொங்கு நாட்டு வழக்கில் இருந்து வருகிறது. இச்சொல் மரக்கால் மட்டுமல்லாது கிண்ணம் (சீவக சிந்தாமணி,3130:3) என்னும் பொருளையும் குறிக்கிறது. கிண்ணமானது வளைந்திருப்பதுபோல இவ்வளவையும் வளைந்திருப்பதால் இப்பெயர் பெற்றிருக்கலாம்.

### மரக்காலின் தோற்றம்

பல்லவர் காலத்தில் வேளாண்மையை மையமாகக் கொண்டு பக்தி இலக்கியம் தோன்றியது. அவர்கள் ஆட்சிக் காலத்திற்கு முன்பு வரை தமிழகத்தில் பரந்துபட்ட அளவில் வேளாண்மை செய்யவில்லை. திணை சார்ந்த வேளாண்மை முறையே இருந்து வந்தது.

அப்பொழுது மக்கள் திணை சார்ந்த அளவுக் கருவிகளையே பயன்படுத்தினர். ஆனால் பல்லவர் காலத்திற்குப் பின் அவர்கள் பயன்படுத்திய அளவுக் கருவிகளில் சிற்சில மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. குறிப்பாகப் பல்லவர் காலத்திற்கு முன்புவரை மரக்கால் என்றொரு கருவி அம்பணம் என்னும் பெயரில் வழங்கப்பட்டது.

அத்தகைய மரக்கால் பல்லவர் காலத்தில் பயன்பாட்டில் இருந்ததைக் கல்வெட்டுகளும் இலக்கியங்களும் சான்று பகர்கின்றன. அவர்கள் ஆட்சிக் காலத்தில் தோன்றிய சமணக் காப்பியமான சீவகசிந்தாமணி பின்வருமாறு மரக்காலைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளது.

"உழுந்து பயறுப்பரிசி யப்பமருங் கலங்கள்
கொழுந்துபடக் கூப்பிநனி யாயிர மரக்கால்
செழுந்துபடச் செந்நெனிறைத்து"
(சீவகசிந்தாமணி.2486:1-3)

என்னும் பாடலடிகள் உழுந்து முதலாகக் கூறப்பட்ட தானியப் பொருள்களைக் கலன்களில் நிறைத்தும் ஆயிரம் மரக்கால்களில் செந்நெல்லைக் குவித்தும் வைத்திருந்ததைக் கூறுகின்றன.

அதோடுமல்லாது பல்லவர் ஆட்சிக் காலத்தில் தோன்றிய சைவ, வைணவ சமயங்களின் முதன்மைக் கடவுள்களான சிவபெருமானோடும் திருமாலோடும் மரக்கால் தொடர்புபடுத்திப் புராணங்கள் புனையப்பட்டுள்ளன. அதாவது ஒரு சிவபக்தர் தம் உறவினர் வீட்டுக்குச் சென்றுள்ளார்.

அங்கு அவர் மதிய உணவு உண்ணும் நேரத்தில் சிவனை வழிபட வேண்டும் என உறவினரிடம் கூறியுள்ளார். அவ்வுறவினர் இந்த ஊரில் சிவபெருமான் இல்லை என்பதை உணர்ந்து தற்காலிமாகக் மரக்காலைச் சிவலிங்கமாக நட்டுள்ளார். அந்தச் சிவபக்தர் மரக்காலைச் சிவனாக வழிப்பட்டார்.

சிவபக்தர் சென்றவுடன் அம்மரக்காலை அவ்வுறவினர் எடுக்க முயன்றுள்ளார். அதை எடுக்க முடியவில்லை. ஆதலால் கடப்பாரையால் அந்த மரக்காலைக் குத்தியபோது இரத்தம் வழிந்துள்ளது. சிறிது நேரத்தில் அந்த மரக்காலைக் கொண்ட சிவன் பூமியில் மறைந்து பின்னர் சுயம்பு வடிவமாகத் தோன்றியது.

அச்சிவன் பூமியிலிருந்து தோன்றியதால் பூமீஸ்வரர் என்றழைத்து இன்றளவும் மக்கள் அதைப் போற்றி வழிபடுகின்றனர். அந்த ஊர்தான் இன்று மரக்காணம் என்று அழைக்கப்படுகிறது. இந்தப் புராணக் கதையிலிருந்து சிவபெருமான் மரக்காலின் வடிவமாக இருக்கிறார் என்பதை உணர முடிகிறது.

திருமால் ஒரு முறை குபேரனிடம் கடன் வாங்கி உள்ளார். அவர் அந்தக் கடனைக் குபேரனுக்குத் திருப்பிச் செலுத்துவதற்காக மரக்காலால் பொருளை அளந்து கொடுத்துள்ளார். மரக்காலால் அளந்து அளந்து கொடுத்து அவர் சோர்வு அடைந்துவிட்டார். பின்னர் அவர் சோர்வினால் மரக்காலைத் தலையில் வைத்து உறங்கிவிட்டார்.

மேலும் உலகத்துக்கெல்லாம் படியளந்தவர் பெருமாள் ஆவார். அவர் ஒருமுறை படியளந்த சோர்வினால் தலைக்கு அணையாக மரக்காலை வைத்து உறங்கிவிட்டார். இந்தக் காட்சியைத் திருப்பூர் வீரராகவப் பெருமாள் கோயிலில் காணலாம். மக்கள் அவரைப் படியளந்த பெருமாள் என்றே அழைக்கின்றனர்.

மேற்கூறிய இருபுராணக் கதைகளிலிருந்து திருமால் தானியம் அளக்க மரக்காலைப் பயன்படுத்தினார் என்பதை அறிய முடிகிறது.

பல்லவர் ஆட்சிக்குப்பின் பிற்காலச் சோழர் ஆட்சியில் மரக்கால் அரசின் செல்வாக்கைப் பெற்று மதிப்பிற்குரிய அளவுக் கருவிகளுள் ஒன்றாக ஆனது. அவர்கள் ஆட்சிக் காலத்தில் ஆடவல்லான், வீதி விடங்கன், திருச்சிற்றம்பலமுடையான், திருவண்ணாமலை, காளத்தியுடையான், தக்சிண மேரு விடங்கன் ஆகிய தெய்வப் பெயர்களைக் கொண்ட மரக்கால்கள் வழக்கில் இருந்தன.

ஆடவல்லான் என்பது தஞ்சைப் பெரிய கோயில் நடராசப் பெருமானின் பெயர்களுள் ஒன்றாகும். இப்பெயரால் வழங்கிய மரக்கால் அக்கோயிலில் இருந்துள்ளது. இதன்மூலம் ஒவ்வொரு கோயிலிலும் இருந்த மரக்கால் அந்தக் கோயிலின் தெய்வப் பெயரால் அழைக்கப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

தெய்வப் பெயர்களில் மரக்கால் இருந்ததுபோல அவர்கள் ஆட்சிக் காலத்தில் இராசகேசரி, அருண்மொழித்தேவன் முதலான அரசர்களின் பெயர் கொண்ட மரக்காலும் அருமொழி நங்கை என்னும் அரசியின் பெயர் கொண்ட மரக்காலும் இருந்துள்ளன.

இதில் இராசகேசரி என்பது சோழ மன்னர்களின் பட்டங்களுள் ஒன்றாகும். குறிப்பாக இராசகேசரி என்பது இராசராசனுக்கு வழங்கப்பட்ட பட்டப் பெயரால் வழங்கும் மரக்காலைக் குறிக்கிறது. அருண்மொழித் தேவன் என்பது அவனுடைய இயற்பெயரைக் கொண்ட மரக்காலாகும். அருமொழி நங்கை என்பது வீரரா சேந்திர சோழனின் மனைவி பெயரால் வழங்கும் மரக்காலாகும்.

தெய்வம், அரசர் மட்டுமல்லாது கடமைக்கால், நாட்டுக்கால், பஞ்சவாரக்கால் ஆகிய மரக்கால்கள் சோழர் ஆட்சியில் இருந்துள்ளன. கடமைக்கால் என்பது அரசினால் மக்களிடம் வரியாகத் தானியங்களை அளந்து பெறுவதற்காக ஏற்படுத்தப்பட்ட மரக்காலாகும்.

நாட்டுக்கூல் என்பது நாடு என்னும் பிரிவுடைய பகுதியிலுள்ள மக்களிடம் தானியங்களை வரியாக அளந்து பெறுவதற்காக ஏற்படுத்தப்பட்ட மரக்காலாகும்.

பஞ்சவாரக்கால் என்பது பஞ்சவாரமாக மக்களிடம் தானியங்களை அளந்து பெறுவதற்காக ஏற்படுத்தப்பட்ட மரக்காலாகும். பஞ்சவாரம் என்பது கிராம மக்களிடம் வரி வசூல் செய்யும் கூட்டத்தாராகும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21 பேர்...

னர்.

இந்நிலையில், நாட்டில் கொரோனாத் தொற்றுக் காரணமாக உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 15,441 ஆக உயர்வடைந்துள்ளது. (ம)

## +1,082...

டுள்ளனர்.

இதற்கமைய, நாட்டில் கோவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 6,11185 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## காணாமல்போன...

காணாமல்போன இரு மீனவர்களது சடலங்களும் கரை ஒதுங்கியுள்ளன.

வத்திராயன் பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான பிறேம்குமார் மற்றும் அவரின் சகோதரியின் மகனான 21 வயது தணிகைமாறன் என்ற இருவருமே சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை கடற்றொழிலிற்குச் சென்று காணாமல் போயிருந்த நிலையில், கடந்த நான்கு நாட்களாகக் காணாமல் போனவர்களைத் தேடும் பணி இடம்பெற்றிருந்தது.

இந்நிலையில் நேற்று வடமராட்சி கிழக்கு ஆழியவளை கடற்கரையில் சடலங்கள் கரையொதுங்கியுள்ளன.

கரை ஒதுங்கியுள்ள சடலங்களைக் நீதிபதி முன்னிலையில் அடையாளம் காட்டப்பட்ட பின்னர் வைத்தியசாலையில் பிரேதப் பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டு உறவினர்களிடம் கையளிக்கும் நடவடிக்கைகள் இடம்பெறுவதாக மருதங்கேணி பொலிஸார் தெரிவித்தனர். (ம-60,64)

## எரிவாயு...

அடுப்பு வெடிப்பு சம்பவம் ஒன்று நேற்று பதிவாகியுள்ளது.

காலை சமையலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்பொழுது திடீர் என அடுப்பு வெடித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு தெரிவித்ததையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் அடுப்பு வெடிப்பு சம்பவம் தொடர்பாகப் பார்வையிட்டிருந்தனர். (ம-316)

## மீள்குடியேற்றம்...

கேட்டறிந்தார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திற்கு நேற்றுக் காலை விஜயம் செய்த இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்ட பணிப்பாளர் றொபேட் யூகம், யாழ். மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் அவர்களை மாவட்டச் செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இக்கலந்துரையாடலில் யாழ்.மாவட்டத்தின் சமகால அபிவிருத்தி, சமூக பொருளாதார நிலைமைகள் பற்றி கேட்டறிந்ததுடன், மீள்குடியேற்ற நடவடிக்கைகளின் தற்போதுள்ள நிலைமைகள் மற்றும் எதிர்நோக்கியுள்ள சவால்கள் தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

குறித்த இக்கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி) மற்றும் UNDP நிறுவனத்தின் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (ம-33)

## இலங்கையை...

யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர், நேற்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இச்சந்திப்புக்கு பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,

அரசியல் விடயங்கள், உரிமை சார்ந்த விடயங்கள் தொடர்பில் பேசியுள்ளோம். 13ஆம் திருத்தத்தை ஏற்றுக்கொள்கின்ற தமிழ்க் கட்சிகளின் நடவடிக்கை சம்பந்தமாகவும் தமிழ் மக்கள் வழங்கிய ஆணைக்கு மாறாக நடைபெறுகின்ற விடயம் தொடர்பில் பேசியுள்ளோம்

இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும்போது இலங்கை கடற்படை அதனை தடுக்காமல் அசண்டையீனமாக செயல்படுவது தொடர்பாகவும் தமிழ் தேசிய அரசியலில் ஈடுபாடு கொண்ட பெண்களுக்கு வரும் மோசமான பழிவாங்கல் சம்பந்தமாகவும் தெரிவித்துள்ளோம்.

தென்னிலங்கை சூழல் மற்றும் அரசாங்கத்தின் செயற்பாடுகள், உரிமைமீறல் சார்ந்த விடயங்கள் தொடர்பாகவும் அவருக்கு தெரியப்படுத்தியுள்ளோம். அமைதியாக அனைத்தையும் உள்வாங்கிய அம்மையாரிடம் கடந்த அறிக்கை சம்பந்தமாக கடுமையான விமர்சனங்களை முன்வைத்திருந்தோம்.

அரசாங்கம் புதிதாக ஆட்சிக்கு வந்ததால் அவர்களுக்கு சந்தர்ப்பம் ஒன்று வழங்க வேண்டும் எனச் சொல்லியிருந்தார்.

ஆனால் இந்த முறை அறிக்கை கடுமையானதாக இருக்கும் எனக் கூறியிருந்தார் என்றார். (ம-33)

## 3 நாட்கள்...

சேர்ந்த சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இணுவில் மேற்கைச் சேர்ந்த சிவகணநாதன் திவாகரி (வயது-23) என்ற மாணவியே உயிரிழந்துள்ளார். காய்ச்சல் காரணமாக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எனினும் அவர் நேற்று திங்கட் கிழமை காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று மருத்துவ அறிக்கையிடப்பட்டது.

சம்பவம் தொடர்பில் யாழ். போதனா மருத்துவமனை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் இறப்பு விசாரணைகளை முன்னெடுத்தார். (ம)

## கொக்குவிலில்...

எனினும்காலை 7.30 மணியளவில் பார்த்தபோது குழந்தை மரணமடைந்து காணப்பட்டுள்ளது.

இறப்பு தொடர்பான மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம)

## வடம...

பெற்றோல் குண்டு வீச்சு தாக் குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கடற்படையினரால் மாதகல் கடற்பரபபில் எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபட்ட இரண்டு இந்திய இழுவை படகுகளும் வடமராட்சி கடலில் மீனவர்களால் சுற்றி வளைக்கப்பட்ட ஒரு படகுமாக மூன்று இந்திய இழுவைப் படகுகளை கடற்படையினர் கைப்பற்றியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக சுப்பர்மடம் பகுதியில் மக்கள் ஒன்றுகூடியமையினால் குறித்த பகுதியில் நேற்றிரவு அமைதி [illegible]

இதன்போது எல்லை தாண்டிய இந்திய மீனவர்கள் இலங்கை மீனவர்களின் இழுவைமடிப் படகுகளை வெட்டி சேதப்படுத்தி விட்டுத் தப்பிச்சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இதன்போது கைப்பற்றப்பட்ட படகுகளை இலங்கை கடற்படை அதிகாரிகள் கொண்டு சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

(இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைவானது)

## தடுப்பூசியே ஒரே வழி

டெல்டா பரவும் வீதம் முழுமையாகக் குறைவடைந்து, ஒமிக்ரோன் பரவல் பாரியளவில் அதிகரித்துள்ளது. நாட்டில் பிரதான வைரஸாக ஒமிக்ரோன் மாற்றமடையக் கூடும். இதனால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை தவிர்த்துக் கொள்வதற் கான ஒரேயொரு வழி, மூன்றாம் கட்ட தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதேயாகும்.

அவ்வாறில்லை என்றால் கோவிட் மாத்திரமின்றி ஏனைய நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வைத்திய சாலை கட்டமைப்புக்கள் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் என்று வைரஸ் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் நதீக ஜானகே தெரிவித்தார். (ம)


தன நிதானய
திகதி - 2022.01.31
சீட்டிழுப்பு இலக்கம் - 694
Q 36 43 72 82

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 31.01.2022
சீட்டிழுப்பு இலக்கம் 2959
M 23 26 28 79

மஹஜன சம்பத
திகதி 2022/01/31
சீட்டிழுப்பு இலக்கம் 4664
X 7 1 8 5 7 6

ஹந்தஹன HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.01.31
சீட்டிழுப்பு இலக்கம் 005
கும்பம் 09 19 24 33 கும்பம்

மெகா பவர்
திகதி 31/01/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1012
F 24 03 51 65 73

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1691 திகதி 2022.01.31
M 04 30 43 60

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1641 நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 31.01.2022 தினம் திங்கள்
L 10 41 42 43
அடுத்த சுப்பர் ஜக்பொட் : 57,141,086/=

சனிதா Shanida
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.01.31
சீட்டிழுப்பு இல: 3602
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.3,669,400/-
வெற்றி இலக்கங்கள் 32 37 60 66 Q

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,366,726/=
திகதி 31.01.2022
வெற்றி வாரம் 3353
வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 02 39 50 58
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,913,060/=

12 வசனா
T 12 24 38 58 73
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 208,917,907/-
சீட்டிழுப்பு வாரம் 817
2022.01.31 திங்கட்கிழமை
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1807
சீட்டிழுப்பு திகதி 31.01.2022
வெற்றி இலக்கங்கள் 03 06 25 30 F
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 30,502,068/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 1487
சீட்டிழுப்பு திகதி: 2022.01.31
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.3,975,460/-
17 30 50 77 N


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அறிவித்தல்

இல. 37, அரசடி வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள நில.பர 2 குளி 12 விஸ்தீரணம் கொண்ட மாதவன் வளவும் குசவன் புலமும் குசவன் வளவும் என்றழைக்கப்படும் ஆதனம் சொரியல் பங்கு ஆதனம் எனவும் குறித்த ஆதனத்தின் பிறிதொரு சொரியல் பங்குதாரர், சொரியல் பங்குதாரர்களான திரவியநாதன் உருத்திரதீசன் பெண் கௌரி ஆகிய எமக்குத் தெரியாமல் குறித்த ஆதனத்தை விற்பதற்கு முயற்சிகள் எடுத்து வருவதாக எமக்குத் தெரியவந்துள்ளமையால் குறித்த ஆதனத்தை வாங்க முன்வருபவர்கள் இது தொடர்பில் அவதானமாக இருக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

(9968)

உருத்திரதீசன் கௌரி

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் நலனிற்காக சகல வழிகளிலும் பங்களிப்புச் செய்த பாடசாலையின் நலன்விரும்பி **திருவாளர் பரஞ்சோதி** அவர்களின் அன்புத் தந்தையார் **திரு. விசுவலிங்கம் சின்னத்தம்பி** அவர்களின் மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-3676)

பாடசாலை சமூகம்
யா/ கல்வியங்காடு இ.த.க. பாடசாலை, கல்வியங்காடு.

# றோயல் அக்கடமி
# ROYAL ACADEMY

நாவலர் றோட், நல்லூர். | அரசடி றோட், யாழ்ப்பாணம்.

## தரம் 6 முதல் O/L வரை

**கல்வியாண்டு - 2022**

தமிழ், ஆங்கில மொழி மூல வகுப்புக்கள்

(9969)

ஆரம்பம் - 05.02.2022, சனிக்கிழமை

☞ புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றது.

EVERSHINE EDUCATION CENTRE
THINK GLOBALLY ACT LOCALLY

## புதிய கல்வியாண்டு - 2022

# ICT 7,8,9 10,11

S.Gowsigan
(B.Tech - ICT)

| | | |
|---|---|---|
| தரம் - 10 (தமிழ் மொழி மூலம்) 04.02.2022 7.00 am - 8.00 am | தரம் - 10 (ஆங்கில மொழி மூலம்) 04.02.2022 8.00 am - 9.00 am | தரம் - 11 (ஆங்கில மொழி மூலம்) பிரிவு I சனி, ஞாயிறு 4.00 pm - 5.00 pm |
| தரம் - 11 (தமிழ் மொழி மூலம்) பிரிவு I சனி, ஞாயிறு 3.00 pm - 4.00 pm | தரம் - 11 (தமிழ் மொழி மூலம்) பிரிவு II புதன் 3.00pm - 4.00pm வெள்ளி 6.15pm - 7.15 pm | தரம் - 11 (ஆங்கில மொழி மூலம்) பிரிவு II திங்கள், வெள்ளி 3.00 pm - 4.00 pm |

- 7-9 வரையான தரங்களுக்கு வகுப்புக்கள் தனித்தனியாக இடம்பெறும்
- 7-9 வரையான தரங்களுக்குரிய நேர அட்டவணைகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்
- நேர அட்டவணை, அனுமதிகளுக்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்

தரம் 11 இற்கு மட்டுப்படுத்தப்பட்டளவில் அனுமதிகள் வழங்கப்படுகின்றன

(9961)

123 பிறவுண் வீதி யாழ்ப்பாணம் 0773784053

# KBK

கந்தர்மடம்/ கொழும்புத்துறை

A/L கணக்கீடு A/L 2022, A/L 2023
தரம் 10, 11 வணிகமும் கணக்கீட்டுக்கல்வியும்

Mr.K.BALAKAJEN

உங்கள் அனுமதிகளுக்கு:- 077 216 8884

# வவுனியாவில் இளைஞர் மாயம்

## உதவி கோரும் குடும்பத்தினர்



(வவுனியா) வவுனியா - தேக்கவத்தை பகுதியை சேர்ந்த இளைஞர் ஒருவர் கடந்த 4 நாட்களாக காணவில்லை என பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

நான்கு நாட்கள் கடந்தும் குறித்த இளைஞர் வீட்டிற்கு வராத நிலையில், அவரது தாயாரால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தில் பாலகிருஷ்ணன் நிரேஸ் (வயது- 30) என்ற இளைஞரே இவ்வாறு காணாமல் போயுள்ளதுடன், அவர் தொடர்பான தகவல் தெரிந்தவர்கள்077 80136 92, 0771014446 என்ற இலக்கத்திற்கு அழைப்பினை ஏற்படுத்தி தெரியப்படுத்துமாறு அவர்களது குடும்பத்தினரால் உதவி கோரப்பட்டுள்ளது.

(ம-250,299)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

விரைவு பொதிகள் சேவை

# V2 TRAVELS

UK-975/=Kg

எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
- நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி

(C-3679)

0768226240 DHL

# கனடாவில்

வேலைவாய்ப்பு WORK PERMITS

தகுதிகள்:- A/L PASS/ DIPLOMA/DEGREE
ஆங்கில அறிவு



அனைத்து துறைகளிலும் அனுபவம் அறிவு, ஆங்கிலப்புலமை உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்புக்கள்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். (C-3667)

0777-068-777

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கைதடி, சாவகச்சேரி பிரதான வீதியில் 22 பரப்புக் காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.
(A9 வீதியிலிருந்து 150m தூரம்)
நுணாவில் வைரவர் கோயில் அருகாமையில் நல்ல சூழல், நிலப்பரப்பு. (தரகர் தேவையில்லை)

(9967)

077 288 0152
077 911 6983

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

# ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (9877)

076 825 7716 (ஆகாஸ்)

# நிரு ரியூசன் சென்ரர்

கோண்டாவில்

**கல்வியாண்டு 2022**

தரம் 6 வகுப்புக்கள்

ஆரம்பம் - 04.02.2022 (வெள்ளி 8 மணி)

கல்விச் சேமிப்புத் திட்டமாக முதல் அனுமதிபெறும் 10 மாணவர்களுக்கு 5000/= வங்கிக் கணக்கில் இடப்படும்.

(9953)

# காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் சுன்னாகம் சந்தியிலிருந்து புன்னாலைக்கட்டுவன் வீதியில் மெயின் றோட்டில் இரண்டாவது காணி கண்ணகை அம்மன் கோவில் வீதியில் 4 பரப்புக் காணி 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்குண்டு.
(சுன்னாகம் பஸ் நிலையத்திலிருந்து 2.5 Km தூரம்)

தொடர்பு:-
077 658 5999

(9965)

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி A32 மெயின் றோட்டில் 1ஆம் வீதியில் 4 பரப்புக் காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

நாவற்குழி சந்தியிலிருந்து 300 மீற்றர் தூரம். வீடமைப்பதற்கு நல்ல சூழல். (நிலப்பரப்பு) ஒரு பரப்பின் விலை 3.5 இலட்சம்.

076 890 9259
077 015 0353

(9966)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.